627

நான் கண்ட நவசீனா

விஞ்ஞானப் பேரறிஞர் ஜே. டி. பெர்னால்
முன்னுரை கொண்டது.

V8·41'N52

...வகுந்தவாசன்

நான் கண்ட

நவ சீனு

ஆக்கியோன்

கே. வைகுந்தவாசன்

விஞ்ஞானப் பேரறிஞரும், உலக சமாதானக் கவுன்ஸில்
உப-தலைவருமான
திரு. ஜே. டி. பேர்னல், F. R. S.
அவர்கள் முகவுரை கொண்டது.

விற்பனை உரிமை

சிந்தனைப் பதிப்பகம்
27, பேந்தியன் சாலை,
சென்னை-8.

முதற்பதிப்பு, டிசம்பர், **1953.**

சமர்ப்பணம்

இலங்கை சீன வர்த்தக ஒப்பந்
தத்தை உருவாக்கத் துணை புரிந்த
சக்திகளுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

உரிமையுடையது

விலை ரூ. **1.**

முகவுரை

இந்நூலாசிரியர் ஒரு பெரும் அதிர்ஷ்டசாலி. மூன்று மாத காலத்திற்குள் உலகின் பெரும்பகுதி மக்கள் வாழ்க்கை முழுவதிலும் கண்டதைவிட, இவர் அதிகம் கண்டிருக்கிறார். இப்பெரும்பான்மை மக்களில் நானும் அடங்குவேன். உலக வரலாற்றின் ஓர் முக்கியமான கட்டத்தில் சீன, சோவியத் நாடுகளைப் பார்த்தும், இரு சமாதான மாநாடுகளில் பங்கு கொண்டும் இவர் பெற்ற அனுபவம் பெரிதும் போற்றற்பாலது. ஆனால் அனுபவத்தின் அனுகூலம் அதை அனுபவிக்கும் ஒருவரின் நுண்ணறிவைப் பொறுத்தும், அவர் குறிக்கோளைப் பொறுத்தும் தான் பயனளிக்கும்.

அனுபவம் வாய்ந்த அனேக சுற்றுப் பிரயாணிகளை விட திரு. வைகுந்தவாசன் கண்டவற்றைத் தெளிவாகவும் அழகுடனும் விளக்குகிறார். இலங்கை தூதுக் குழுவினர்க்கோ, அன்றி தனக்கோ தனிப்பட்ட முறையில் நன்மை பயப்பதற்காக இந்தப் பிரயாணம் மேற்கொள்ளப் படவில்லை என்பதையும், இலங்கைப் பொது மக்கள் தம் அனுபவத்தைப் பெறவேண்டும் என்னும் நோக்கத்துடன் தான் பிரயாணம் தொடங்கப்பட்டது என்பதையும் நன்கு உணர்ந்திருக்கிறார். இப்பிரயாணம் நமக்குப் படிப்பிக்கும் பாடங்கள் வெள்ளிடைமலை போல் விளங்குகின்றன. உலக சமாதானத்தைவிட சீன, ருஷ்யா மக்கள் முழுமனதோடு ஆசிக்கும் பொருள் வேறு ஒன்றில்லை என்பதை இவர் கண்ட காட்சிகளும், சமாதான மாநாடுகளும் எடுத்துக் காட்டுகின்றன. சமாதானம் நிலவினால் தான் தங்கள் நாடுகளை சிறப்பான முறையில் புனருத்தாரணம் செய்ய முடியுமென்பதையும், மனித சமுதாயத்தை—இயற்கையை மாற்றியமைப்பதன் மூலமாக எழில் மிக்க, எல்லையற்ற வளம் பெற்ற வாழ்க்கையை நிர்மாணிக்க முடியும் என்பதையும் சீன, சோவிய மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

இத்தகைய மகோன்னத சமுதாயத்தைப் படைப்பதற்கு வேண்டிய ஆற்றல் சீன, சோவியத் மக்களிடம் உண்டு என்பதைத் தாம் நேரில் கண்டவைகளைக் கொண்டு

விரிவாக விளக்குகிறுர் திரு. வைகுந்தவாசன். அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஏகாதிபத்யப் பிடிப்பகற்றி, முன்னுளில், "தாழ்வுற்று, வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு" நின்ற எந்த நாடும் துரிதமாக முன்னேறி, இத்தகைய ஓர் புது நாகரிகத்தைப் படைக்க முடியுமென்ற அறிவை இந்த அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது. இவ்வறிவு, பத்துக் கொழும்புத் திட்டங்கள் நமக்கு அளிக்கக் கூடிய பலன்களிலும், அதிகப் பலன் நல்கக் கூடியது.

சோவியத் நாடுகளில் ஜார்ஜியா என்ற சிறு குடி அரசை இலங்கையுடன் ஒப்பிட்டு, ஒரு சிறிய நாடு கூட எவ்விதம் தன்னுடைய தனிப்பட்ட கலாச்சார வளர்ச்சியை, சோஷியலிச தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு அமையப் பெற்ற குடியரசுகளுடன் சேர்ந்து சாதித்தது - சாதிக்க முடியும் - என்ற உண்மையை உணர்ந்ததுதான் திரு. வைகுந்தவாசன் இந்தப் பிரயாணத்தில் பெற்ற கடைசி அனுபவம். ஜார்ஜிய குடியரசின் தேயிலைத் தோட்டங்கள் பற்றிய விவரங்களும், குடியரசின் கூட்டுப்பண்ணைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வாழ்க்கை வளமும் என் மனதில் நிலை பெற்று விட்டது. இலங்கைத் தோட்டத் துரைமார் பங்களாக்களில் நடத்தும் டாம்பீக வாழ்க்கையும், அதற்கு மாருகத் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் குருவிக் கூடுகளில் நிலவும் வறுமையும் இன்னும் என் மனத் திரையில் காட்சி அளிக்கின்றன. அழகின் சிகரமாக விளங்குகின்ற இலங்கை நாட்டின் பெரும் பொருள் வளம் அத்தனையும் அந்நாட்டு மக்களுக்காகப் பயன் பெற்றுப் பொலியும் அவ்வின்பக்காட்சி எப்படியிருக்கும் என்று நான் எண்ணிப் பார்த்தேன். அந்நன்னுள் வெகு தூரத்தில் இல்லை என்பதைப் பற்றி எனக்கு எவ்வித ஐயமும் கிடையாது. அம் முறையில் நாட்டை நிர்மாணிக்க விரும்புவோர் பிறநாடுகளின் அனுபவங்களை அறிந்திருப்பவர்களாக விளங்க வேண்டியது அவசியம். அத்தகையோருக்குச் சிறந்த முன்னுரையாக இந்நூல் விளங்கும்.

இலண்டன்,
5, மார்ச் 1953.

ஜே. டி. பேர்னல்.

ஆசிரியர் குறிப்பு

நவ சீனத்திலும், சோவியத் நாடுகளிலும் மூன்று மாத காலமாகக் கண்டு, கேட்டுப் பெற்ற அனுபவங்களைப் பற்றி அவ்வப்போது குறிப்புக்கள் எடுத்து வைத்திருந்தேன். அவைதாம் இந்நூலமைவதற்கு அடிப்படை. நவ சீனத்திற்கோ அன்றி சோவியத் நாடுகளுக்கோ போய்வந்த எந்தத் தமிழரும் தமது அனுபவத்தை நூலாக எழுதி வெளியிடவில்லையே என்ற குறையைப் போக்குவதற்காகவே இந்நூலை எழுதினேன். இன்றைய நிலையில் இத்தகைய ஓர் நூல் மிகவும் அவசியம் என்று நான் எண்ணுகிறேன். இச்சிறு நூலைத்தான் நான் கடந்த சில வாரங்களில் உருவாக்கினேன். நான் எடுத்த குறிப்புக்களைத் தகுந்த முறையில் ஒழுங்கு படுத்தப் போதிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. அதுமட்டுமல்லலாமல், அவற்றை நான் அப்படிச் செய்து முடிக்கவும் கருதவில்லை. ஏனென்றால், இந்நூல் எந்த ஒரு தனிப் பொருளையும் பற்றிய விரிவுரையோ, விளக்க வுரையோ அல்ல. சுற்றுப் பிரயாண ஒழுங்குப்படி தினசரி நான் கண்டவற்றையும், நான் அங்கு என்ன செய்தேன் என்பதையும் விளங்க வைக்கும் ஒரு முயற்சியின் உருவமே இந்நூல். ஆகையினால், ஒரு பொருள் பற்றி பல முறை எழுத வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நான் ஆளாகியுள்ளேன்.

இலங்கையின் பிரதிநிதியாக பீக்கிங் சமாதான மாநாட்டிலும், வியன்னா சமாதானக் காங்கிரசிலும் பங்கு பற்றிய அனுபவங்கள் பற்றி விளக்க இந்நூலில் ஒரு பகுதியை ஒதுக்கியுள்ளேன். இந்நூல் சீன மக்கள் குடியரசையும், சோவியத் நாடுகளையும் சரிவர உணர்ந்து கொள்ளப் பெரிதும் துணை புரியுமென்று நம்புகின்றேன்.

இலண்டன்,
28, ஜனவரி 1953.

கே. வைகுந்தவாசன்.

பதிப்புரை

தமிழில் பிரயாண நூல்கள் பெருக வேண்டுவது அவசியம். பிரயாணம் கல்வியின் ஒரு பகுதியாகும். இக்கருத்தை முக்கியமாகக் கொண்டு நண்பர் திரு. வைகுந்தவாசன் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் ஒரு பகுதியை வெளியிடுகிறோம்.

திரு. வைகுந்தவாசன், இலங்கை அரசாங்க ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகக் கடமையாற்றியவர். முற்போக்கான எண்ணங்களைக் கொண்டிருந்தவர் என்பதற்காகவும், அரசாங்க ஊழியர் நல உரிமைகளுக்காகப் போராடியதற்காகவும், அரசாங்கப் பதவியிலிருந்து நீக்கப் பட்டவர். அரசாங்கப் பணியில் பத்து ஆண்டுகள் தொண்டாற்றியவர். 'மக்கள் குரல்' என்ற ஆங்கிலக்கிழமை இதழ் ஒன்றை ஆசிரியராக இருந்து நடத்தியிருக்கிறார்.

ஆசிய, பசிப்பிக் சமாதான மாநாட்டின் துணைக் காரிய தரிசியாகவும், 1952–ம் ஆண்டில் வியன்னாவில் நடந்த சமாதானக் காங்கிரஸிற்கு, இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கடமை புரிந்தவர்.

இவர் சீனா, சோவியத் யூனியன், இலண்டன், பாரசீகம், ரோம், எகிப்து ஆகிய இடங்களைப் பார்த்து வந்திருக்கிறார்.

இத்தமிழ் மொழிபெயர்ப்பைச் செய்து கொடுத்த நண்பர் திரு. வ. பொன்னம்பலம், பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்களுக்கும், இதனைச் சரி பார்த்து உதவிய நண்பர்களுக்கும் எங்களது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்நூலை அழகிய முறையில் கொண்டுவர உதவி புரிந்த 'விநோதன்' அச்சகத் தொழிலாளர் சகோதரர்களுக்கும், வேறு பல வழிகளில் தக்க ஆலோசனைகள் கூறி உதவி புரிந்த 'விநோதன்' ஆசிரியை பண்டிதை. ரா. ரங்கநாயகி அம்மையார் அவர்கட்கும் எங்களது அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சென்னை,
1953.

முன்னணி வெளியீட்டகத்தார்.

சீன மக்கள் குடியரசின் மூன்றாவது ஆண்டு விழாவின் போது, (1952-ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி) துருப்புகளின் அணிவகுப்பைத் தலைவர் மாசே-துங் பார்வையிடும் காட்சி.



சுவாமி நாரவில்ல தம்மரத்தின (வலது புறம்), இந்திய தூதுக்குழுவின் தலைவர் டாக்டர் சைபுதீன் கிச்சுலுவுடனும் (மத்தியில் இருப்பவர்), மாநாட்டில் பங்கு பற்றிய சீனப் பிரதிநிதியோடும் பேசிக்கொண்டிருக்கிறார்.

நவ சீனு

சீனுவுக்குப் புறப்பாடு

1952-ம் ஆண்டு அக்டோபர் மாதம் பீக்கிங்கில் நடந்த ஆசிய பசிபிக் நாடுகளின் சமாதான மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை தூதுக் குழுவினரில் ஒருவராக நான் சென்றது, நவசீனத்தைப் பார்க்க எனக்கு வாய்ப்பளித்தது. இலங்கைத் தூதுக்குழுவைச் சேர்ந்த பத்து உறுப்பினரும் ஒன்ருய் பிரயாணமாகப் பல இடையூறுகளால் முடியாமற் போய்விட்டது. தூதுக்குழுவின் தலைவர் சுவாமி நாராவில தம்மரத்தினுவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான திரு எஸ். டி. பண்டார நாயக்கா அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு என். சண்முகதாசனும், செப்டம்பர் மாதம் ஆரும் நாள் புறப்பட்டனர். என் மனைவியும் நானும் செப்டம்பர் மாதம் 13-ம் நாள் புறப்பட்டோம். குழுவினரில் ஏனையோரான லங்கா சமசமாசக் கட்சியைச் சேர்ந்த திருவாளர்கள் டி. பி. ஆர். குணவர்த்தனுவும், ஸி. கிக்கடுவகேயும், டாக்டர் என். எம். பெரைராவைத் தலைமையாகக் கொண்ட சமசமாசக் கட்சியைச் சேர்ந்த எட்மன் சமரக் கொடி (இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தினர்), டாக்டர் கெக்டர் பெர்னுண்டோவும், கொழும்பு நகராண்மைக் கழக உறுப்பினரான இரத்தின வீரா (கம்யூனிஸ்ட் கட்சி) ஆகியோர் செப்டம்பர் 14, 15-ம் நாட்களில் சீனு நோக்கிப் பிரயாணமாயினர்.

மனைவியுடன் நான் இலங்கையை விட்டு வான மார்க்கமாகச் சென்னை வழியாகக் கல்கத்தாவிற்கு அடுத்த

நாட்காலை போய்ச் சேர்ந்தோம். "டம்டம்" என்ற கல்கத்தா விமான நிலையத்தில் எண்ணற்ற சீன மக்களைக் கண்டேன். விசாரித்த அளவில் அவர்கள் அனைவரும் தங்கள் தாய்நாட்டிற்கு, வெளிநாடுகளில் வாழும் சீன மக்களின் பிரதிநிதிகளாக அக்டோபர் முதல் நாளன்று பீக்கிங்கில் கொண்டாடப்படும் சீன தேசிய விழாவில் கலந்து கொள்ளப் போகிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன். பீக்கிங்கை நோக்கித்தான் நாங்களும் புறப்பட்டோம் என்பது அறிந்து அகமகிழ்ந்தனர் அங்கு கூடிய சீனமக்கள் அனைவரும். "இலங்கையில் வாழ்கின்ற சீன மக்களின் பிரதிநிதிகள் யாராவது பீக்கிங்கிற்குப் போகின்றார்களா?" என்று அவர்கள் ஆர்வத்துடன் கேட்டனர். சீனர் சிலரே இலங்கையில் வாழ்கின்றனர் என்றும், அவர்களுடைய பிரதிநிதிகள் யாராவது வந்தார்களா என்பதை நிச்சயமாக நான் சொல்ல முடியவில்லை என்றும் கூறினேன். தென்கிழக்கு ஆசியப் பிரதேசத்தில் ஒரு கோடிக்குமேல் சீனர்கள் வாழ்கின்றார்கள் என்று கேட்டு அதிசயமுற்றேன். வெளிநாடுகளில் வாழும் சீன மக்கள் தங்கள் தாய்நாடாகிய நவ சீனத்திடம் கொண்டுள்ள எல்லையற்ற ஆர்வம் சீனம் போய்ச்சேரும் வரை என் சிந்தனையைத் தூண்டிச் சுடர்விடச் செய்தது. அன்று நண்பகல் பி. ஓ. ஏ. ஸி. (B. O. A. C.) விமான மூலமாக மாலை இரங்கூன் வந்தடைந்தோம். அடுத்தநாட் காலை பிரயாணம் தொடர வேண்டும் என்ற காரணத்தினால், அன்று இரங்கூன் பட்டினத்தையும், அடுத்துள்ள புகழ் பெற்ற புத்த கோவிலையும் பார்த்தோம்.

இலங்கை அரிசித் தூதர்

அடுத்த நாட் காலை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பர்மாவுக்குத் தூதராகச் சென்ற திரு. சுசந்தா டி –

பொன்சேகா அவர்கட்கும், பர்மா நாட்டில் உள்ள சீன நாட்டுத் தூதுவர் அவர்கட்கும் இடையே நடந்த அன்னியோன்னியமான உரையாடல் கண்டு பேராச்சிரியத்துள் மூழ்கினேன். முப்பது வயதிற்குட்பட்ட வசீகரமான சீனத்தூதுவரின் தோற்றம் என்னைப் பெரிதும் கவர்ந்தது.

இலங்கைக்கு அரிசி வாங்கும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக இலங்கைத்தூதர் சீனுவுக்கு எங்களுடன் வருகிருர் என்பது எனக்கு முன்கூட்டியே தெரியும். அவர் விமானத்தில் எனக்கு முன்னிருந்த இடத்தில் வந்தமர்ந்தது மகிழ்ச்சியூட்டியது. நான் பர்மா, சீனு ஆகிய நாடுகளைப் பற்றியும், எல்லாவற்றிற்கும் மேலாக அரிசி வாங்குவது பற்றிய விபரங்களையும் அவரிடம் அறிய வேண்டும் என்ற பேரவா கொண்டிருந்தேன். ஆகையினுல், அவர் வந்து எனக்கு முன்னமர்ந்ததைப் பெரிதும் வரவேற்றேன். இலங்கைச் சட்டசபையில் அவர் முன்னுள் உபசபாநாயகராக இருந்தவர். அந்த நாட்களில் இலங்கை ஊழியர் சங்கத்தின் பிரதிநிதியாக அவரைச் சந்தித்துள்ளேன். அவர் வேலையுடன்—அரிசியுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட சமாதானக் குழுவினரின் பிரதிநிதியாக நாங்கள் சீனுவிற்குப் போகின்ருேம் என்று கூறியவுடன் அவர் மனமாரச் சிரித்தார். நாங்கள் பல பொருள்களைப் பற்றி உரையாடிக் கொண்டே போனுேம். 'முக்கியமாக, சீனு பற்றியும், குறிப்பாக அரிசி பற்றியும் பேசினுேம். அரசாங்க அலுவலாளர்கள் ஒரு சிலரிடமிருந்தும், அரசியல்வாதிகள் சிலரிடமிருந்தும் பலத்த எதிர்ப்பைத் தாம் எதிர்பார்ப்பதாயும், எனினும் பீக்கிங்கில் நடத்தப் போகும் சீன அரிசி வியாபார ஒப்பந்தம் இறுதியாக வெற்றியடையும் என்று தாம் நம்பிக்கையுடனிருப்பதாயும் அவர் தெரிவித்தார். குறுகிய மூன்ருண்டு காலத்தில் சமூக அமைப்பையே

மாற்றி, பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தி வெளிநாடுகளுக்குத் தன்தேவைக்கு மிஞ்சிய அரிசியை அனுப்பத் தகுந்த முறையில் நவசீனத்தை நல்வழிப் படுத்திய சீனப் பெருமக்களைப் பெரிதும் புகழ்ந்தார்.

பர்மாவின் நிலைமை திருப்தியற்ற நிலையிலுள்ளதாக அவர் தெரிவித்தார். பர்மாவின் சில பகுதிகளில் என்ன தான் நடக்கின்றது என்று அறியாத நிலையில் பர்மா அரசாங்கம் இருப்பதாக அவர் கூறினர். இவை எப்படியிருப்பினும், இலங்கையிலுள்ள குட்டை குழப்பும் அரசியல் சூழ்நிலையிலிருந்து தாம் விலகியிருப்பதில் மகிழ்ச்சியே என்றும் அவர் கூறினர். சீன அரிசி பற்றிப் பேசும்போது, பர்மாவினுடைய பரந்த நெல்வயல் பரப்புக்கு மேலே பறந்து கொண்டிருந்தோம். எல்லையற்ற பரப்பு! வளம் பொருந்திய வயல்கள்! ஏன் முன் போலவே பர்மாவிடமே நமக்கு வேண்டிய அரிசியை வாங்கக்கூடாது என்ற கேள்வி எழும்பி, என்னை ஆச்சரியத்துள் மூழ்கடித்தது. திடீரென பர்மாவில் விளையும் அரிசி முழுதையும் உட்கொள்ளத் தக்க அளவிற்கு, ஒரே இரவில் அங்குள்ள மக்கள் தொகை இரட்டித்து விட்டது என்று யாரும் கூறிவிட முடியாது. பர்மாவிலுள்ள அமெரிக்கர் சிலர் டாலர் துணை கொண்டு பர்மா அரிசி அத்தனையும் வாங்குகிறார்கள். அரிசியின் ருசியே தெரியாத அமெரிக்கர்கள் தாம் உட்கொள்ளுவதற்காக வாங்கவில்லை. ஆனல் எதற்காக வாங்குகிறார்கள் என்பது யாரும் கூற முடியாத ஒரு மர்மம்.

எண்ணெய் எடுப்பதற்காக விமானம் தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொக் என்ற விமான நிலையத்தை வந்தடைந்து ஒரு மணி நேரம் நின்றது. அது மிக அழகிய தற்கால விமான நிலையம். தொடர்ந்து பிரயாணமாகி ஹாங்கொங்கை அன்று மாலை போய்ச் சேர்ந்தோம். விமா

னத்தைவிட்டு வெளியேறியதும், திரு. பொன்சேகா அவர்களை வரவேற்க வந்திருந்த பாராளுமன்ற உணவிலாகா செயலாளர் திரு. வி. குமாரசாமி அவர்களை விமான நிலையத்தில் கண்டேன். சில அலுவாலளர்கள் பின் தொடர, அவர்கள் விமான நிலயத்தை விட்டுப் புறப் பட்டனர்.

ஹாங்கோங்கில் வரவேற்பு

மூன்று இளம் சீன நண்பர்கள் சீன சமாதானக் குழுவின் சார்பில் எங்களை வரவேற்றனர். டோங்சை—சி, லீகுஎக்—சொங், தாங் எஸ். சூ என்ற மூவருமே அவர்கள். முதலில் எங்களுக்கு வணக்கம் செலுத்தி வரவேற்ற டோங்சை—சியின் முகத்தை நான் என்றுமே மறக்கமாட்டேன். அவருடைய முகம் நவ சீனத்தைப்பற்றி நாம் படித்தவற்றையும் கேட்டவற்றையும் ஒருங்கே சுடர் பரப்பி பிரகாசிப்பதுபோல் தோன்றியது. புத்திகூர்மையும், தன்னம்பிக்கையும் அவர் கண்களிலே ஒளி வீசின.

ஹாங்கொங்கின் சுங்க இலாகா எங்களுக்கு எந்த வகையான தொல்லையையும் தரவில்லை. நாங்கள் பீக்கிங் சமாதான மகாநாட்டுக்குச் செல்லுபவர்கள் என்று கூறியவுடன் அந்த பிரிட்டிஷ் சுங்க அதிகாரி பாஸ்போர்ட்டையும், பெட்டிகளையும் பார்த்ததற்கு வருத்தம் தெரிவிப்பவர் போலக் காணப்பட்டார். ஹாங்கொங்கின் பிரிட்டிஷ் அடிமை அரசாங்கம், அதற்குமேல் ஒரு தடையுமின்றி அனுமதி தந்தது, சிங்கம் போன்ற சீனநாட்டை எவ்வளவு மதிப்புடன் நடத்தத் தலைப்பட்டு விட்டது என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

சீன நண்பர்கள் நாங்கள் தங்கவேண்டிய 'கவுலூன்' ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கே பிலிப்

குணவர்தன, எட்மன் சமரக்கொடி, டாக்டர் பெர்னாண்டோ ஆகியோர் சிங்கப்பூர் மார்க்கமாக முன் கூட்டியே வந்து தங்கியிருந்ததைக் கண்டோம். ரத்தின வீரா, கிக்கடுவகே என்ற இரு சமாதானத் தூதுக் குழுவைச் சேர்ந்தவர்களும் வேறு விமான மூலம் காலம் தாழ்த்தி எங்களோடு வந்து சேர்ந்தனர். ஹாங்கொங்கி லுள்ள ஒரு முற்போக்குத் தினத்தாளின் நிருபர் பேட்டி காண வந்திருந்தார். இலங்கையிலுள்ள அரசியல் நிலைமை பற்றியும், சமாதான இயக்கத்தைப்பற்றியும் கூறுமுன், பீக்கிங் மகாநாட்டில் கலந்து கொண்டு நவசீனத்தைப் பார்க்க நான் பெரு மகிழ்ச்சி யடைவதாக அவருக்குக் கூறினேன்.

ஆபாசத்தின் சிகரம்

அடிமை நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கை, சீர்கேட்டின் சிகரமாக விளங்குவதை 'கவுலூன்' ஹோட்டலில் கண்டேன். பிரிட்டிஷ் போர் வீரர்களு டன் நடனமாடிய சீன நங்கையர் பலர் வெளிறிய முகத் துடனும், சாயம் தீட்டப்பட்ட சிவந்த உதடுகளுடனும், வேறு யாராகிலும் நடனத்துக்கு வருவார்களோ என்ற அவாவுடனும் அந்த ஓட்டலின் மூலைகளில் அமர்ந்திருந் தனர். குலைந்த சிகையுடன் காணப்பட்ட அவர்களில் சிலர் குட்டிப் பிசாசுகள்போல காட்சி அளித்தனர். இத்தகைய நங்கையர் சிலரை அடுத்த நாள் ஹாங்கொங் பட்டினத்தைச் சுற்றி வரும்போது நான் கண்டேன். நவ சீனத்திலுள்ள மங்கையரைக் கண்ட பின்புதான் ஹாங்கொங்கில் வாழும் சீனப் பெண்களுக்கும், நவ சீனத்தில் வாழும் சீனப் பெண்களுக்குமுள்ள முரண் பாட்டைச் சரிவர உணர முடிந்தது. இந்த இரு சாராரும் சீனர் என்ற ஒரே தேசீய இனத்தைச் சேர்ந்தவர் என்று நம்பவே முடியவில்லை. ஒரு சமுதாய அமைப்பைப்

பொறுத்துத்தான் எத்தகைய வளர்ச்சியும் இருக்க முடியும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

ஹாங்கொங் வீதிகளில் நான் போகும்போது, குழந்தைகள் உள்பட பல பிச்சைக்காரர் என்னைப் பின்தொடர்ந்தனர். சீனத்தில் வதிந்த இரண்டு மாதங்களிலும் ஒரு பிச்சைக்காரரைக்கூட நான் கண்டதில்லை. ஹாங்கொங்கைச் சுற்றிப் பார்க்கும்போது, கேலியைச் சேர்ந்த ஓர் இலங்கையர் நடத்தும் நகைக் கடைக்குச் சென்றோம். அவர் வாழ்க்கையில் வளம் பெற்றவராகக் காணப்பட்டார். செப்டம்பர் 16-ம் நாள் இலங்கை தூதுக் குழுவினர் எழுவரும் நண்பகலுக்கு சிறிது முன்பதாக ஹாங்கொங்கைவிட்டுப் புறப்பட்டு, ஒருமணி நேரத்தில் சீன நாட்டு எல்லையில் உள்ள இரயில் நிலையத்தை வந்தடைந்தோம். ஹாங்கொங்கைச் சேர்ந்த எல்லைக்குள் உற்சாகமற்ற நிலையில் கவலைக் குறிகள் முகத்தில் தோன்ற நூற்றுக்கணக்கான பிரிட்டிஷ் வாலிபப் போர் வீரர்கள் அணிவகுத்துப் போன பரிதாபக் காட்சியைக் கண்டேன். தூக்குத் தண்டனைக்குள்ளாகிய மனிதர்போலக் காணப்பட்ட அந்தக் காட்சி என்னைப் பெரிதும் கலக்கிவிட்டது.

சீன மண்ணிலே......

சீன எல்லை இரயிலடியை நாங்கள் நெருங்கிக் கொண்டிருக்கும்பொழுது, சீன தேசிய கீதத்தின் ஒலி எங்களைத் தழுவித் தவழ்ந்தது. பட்டொளி வீசிப் பறந்த சீன தேசியக் கொடியை வணங்கியும், தேசீயப் பாட்டுகளைக் கேட்டும் நான் பெற்ற மட்டற்ற மகிழ்ச்சியை இன்றும் என்னால் நினைவுக்குக் கொண்டுவர முடிகிறது. சீன எல்லை இரயில்வே நிலயத்தை வந்து சேர்ந்ததும், நாம் ஒரு புது உலகத்தையே வந்தடைந்தோம்

என்ற எண்ணம் உண்டாயிற்று. காண்டனுக்குப் போவதற்கு இரயில் நிலையத்தில் அயல் கிராமங் களிலிருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான சீன ஆண், பெண், குழந்தைகள் சகலரும் புகையிரதத் திற்காகக் காத்திருந்தனர். அவர்கள் எல்லோரும் தங்கள் வரும் காலத்தைப்பற்றி நம்பிக்கையுடையோர்களாயும், மகிழ்ச்சியுடையோராயும் காணப்பட்டனர். எளிய உடைகள் அணிந்திருந்தனர் எனினும், அவைகள் நல்ல முறையில் அணியப்பட்டிருந்தன. இரயில் நிலையமும், அதை அடுத்த நிலப்பகுதியும் மெச்சத்தக்க அளவுக்குச் சுத்தமாக இருந்தன. இரயில் நிலைய கட்டிடத்துக் குள் ஒரு பெரிய படிப்பகத்தில் எண்ணற்ற நூல்களையும், வெளியீடுகளையும் பிரயாணிகள் படித்தவண்ணம் காணப் பட்டனர். பிரயாணிகளுக்கென்றே ஒதுக்கப்பட்ட களியாட்ட நிலையத்தில் 'கேரம்' போன்ற பல விளையாட்டுக்கள் நடைபெற்றன. சீன சமாதானக் குழுவின், காண்டன் கிளையிலிருந்து யாங், செல்வி சென் என்ற இரு சீன நண்பர்கள் எங்களை வரவேற்றனர். செல்வி சென் எமக்காக வந்த மொழிபெயர்ப்பாளர் என்று தன்னை அறிமுகம் செய்துகொண்டார். அவர் லண்டனில் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றமையினால், வெகு துரிதமாக ஆங்கிலம் பேசினார்.

யாங் என்றவர் நவசீனத்திற்கு எங்களை வரவேற்று வணக்கம் செலுத்தினார். சிறிது நேரம் பேசிய பின், எங்களைச் சாப்பிட அழைத்தனர். சீன மக்கள் சிறு குச்சிகள் கொண்டு சாப்பிடுவோர் என்ற காரணத்தினால், வைக்கப்பட்டிருந்த குச்சிகளை, எங்களில் சிலர் பயன்படுத் தினர். எங்களில் பலர் குச்சியால் சாப்பிட்டுப் பழக்கம் அற்றவர்கள் என்ற காரணத்தினால், பலருக்கு முள்ளும் கரண்டியும் வழங்கப்பட்டன.

காண்டன் பிரவேசம்

தென் சீனுவில் உள்ள காண்டன் என்ற பட்டணம் நோக்கி அன்று மாலை பிரயாணமானோம். நெற்பயிர், காய்கறி, பூந்தோட்டங்கள் அடங்கிய பரந்த வயல் பரப்புகளூடே நாங்கள் போய்க்கொண்டிருந்தோம். நவ சீனத்தில் நிலச் சீர்திருத்தம் நடந்ததின் காரணமாக, உழவர்கள் மத்தியில் உற்சாகம் பெருகியிருந்தது. அவ் வுற்சாகம் நெல் உற்பத்தியைப் பெருக்கப் பெரிதும் துணை புரிந்தது. மகிழ்ச்சியும், திருப்தியும் கொண்ட எண்ணற்ற கிராம மக்கள் வேலைகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டோம். சீனப் புகை வண்டிகளிலெல்லாவற்றிலும், கையாளப் படும் புதுமுறையென்னவெனில், ஒலிபெருக்கி மூலமாகப் பிரயாணிகளுக்கு அறிவிப்பு கூறுவதும், இன்னிசை வழங்குவதுமேயாகும். வண்டி இரயில் நிலையத்தில் நிற்கும்பொழுது, பிரயாணிகள் இரயில் வண்டியிலுள்ள மலக்கூடத்தை உபயோகிக்கக் கூடாதென்று கூறப்படு கிறது. நாங்கள் இரவு 7 மணிக்குப் போய்ச் சேரும் பொழுது, காண்டன் சமாதானக் குழுவினரால் அளிக்கப் பட்ட வரவேற்பு எம்மை எல்லாம் பிரமிக்கச் செய்தது. அலங்கரிக்கப்பட்ட இரயில் நிலையத்தில் நூற்றுக் கணக்கான மக்கள்கூடி எம்மை வரவேற்றனர். அழகான பூச்செண்டுகளுடன் சீன சாரண இயக்கத்தைச் சேர்ந்த இளைஞரும் சிறுமியரும் வண்டியருகில் வந்து எம்மை வரவேற்றனர். நூற்றுக்கணக்கானவர்கள் கெம்பீரமான தோற்றத்துடன் உடையணிந்து காணப்பட்டனர்.

காண்டன் சமாதானக் குழுவின் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் எம்மை 'சமாதானம் நீடூழி வாழ்க'

என்ற இடி முழக்கத்தின் மத்தியில் வரவேற்று, பட்டணத்திலேயே பெரிதான 'விக்டரி' ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு நாங்கள் அனைவரும், விரும்பி உட்கொண்ட ஒரு சிறந்த விருந்து உபசாரம் நடந்தது. அந்த உபசாரத்திற்குத் தலைமை தாங்கியவர் பேசுகையில், சமாதான சூழ்நிலையில்தான் மக்கள், நாட்டை வளப்படுத்த முடியும் என்ற காரணத்தினால், சீன மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்பதை விளக்கினார். சமாதான இயக்கத்தின் முக்கியத்துவத்தையும், இலங்கை தூதுக் குழுவினர் வீடுதிரும்பியபின் தாம் கண்ணாரக் கண்டவற்றை கூறவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினார். விருந்து முடிந்தது. ஆர அமர்ந்தோம். ரத்தின வீரா என்னை 'அதோ' என்று மறுபக்கம் காட்டினார். அங்கு கண்ட காட்சி என்னை மிகிழ்ச்சிமிக்க ஆச்சரியத்தில் மூழ்கடித்தது. எங்களுக்குச் சிறிது நேரத்திற்கு முன்பு சாப்பாடு தந்த ஹோட்டல் ஊழியர்கள் தம் தொழிலை முடித்தவுடன் சீனமக்கள் சகலரும் சரிநிகர் சமானமாக வாழ்கின்றனர் என்பதை அத்தாட்சிப் படுத்தும் முறையில், மெத்தை தைத்த ஆசனங்களில் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். சீனாவில் நாம் காணவிருக்கும் சீரிய சமத்துவ வாழ்விற்கு இது ஆரம்பக் காட்சிபோலும் என நான் எண்ணிக் கொண்டேன். மறுநாட் காலை அகில சீன நீச்சல் போட்டியைக் காணப் போயிருந்தோம். அங்கு குழுமியிருந்த மக்கள் அனைவரும் ஒன்றாய் எழுந்து ஆரவாரித்து எம்மை வரவேற்றனர். சீனத்தின் பல பாகங்களிலிருந்தும், பல தொழில் செய்து வாழும் பலதிறப்பட்ட மக்களும் அப்போட்டியில் கலந்துகொள்ளுவது, சீன அரசாங்கம் பல திறப்பட்ட விளையாட்டுக்களுக்கும் காட்டிவரும் ஆதரவையே எடுத்துக் காட்டுகின்றது.

1911-ம் ஆண்டு டாக்டர் சன்யாட்-சென் தலைமையில் காண்டனில் நடந்த புரட்சியில் உயிர்நீத்த 72 தியாகிகளின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டு பொலிவுற்று விளங்கும் பூங்காவை அன்று நண்பகல் சென்று பார்த்தோம். மறைந்த மாவீரருக்கு சீன மக்கள் எவ்வகையில் மரியாதை செலுத்துகின்றனர் என்பதை அங்கு கூடியிருந்த மக்கள் கூட்டம் காட்டியது. சன்யாட்-சென் நினைவுச் சின்னமாக 8000 பேர் அமர்ந்து பார்க்கத்தக்க மாபெரும் மண்டபத்தை அமைத்திருந்தனர். பேச்சாளர் மேடைமட்டும் கொழும்பு நகர மண்டபத்தில் பாதியளவிருந்தது. வெளிநாடுகளில்வாழும் சீன மக்கள் திரட்டிய நிதிதான் அந்த மண்டபமாக மலர்ந்தது என்று கேட்டவுடன் நான் ஆச்சரியமுற்றேன். நான் போன அன்று அந்த மண்டபத்தில் ருமேனிய கலைஞர் சிலருக்கு வரவேற்பளிக்க முயற்சிகள் நடந்து கொண்டிருந்தன. 'சீன—ருமேனிய நாட்டு மக்கள் உறவு நீடூழி வாழ்க!' என்று எழுதப்பட்ட பதாகைகள் வாயிலில் பொலிவுற்று விளங்கின. எங்களுடன் வந்த துறைமுகத் தொழிலாளர் சங்கத் தலைவரான கிக்கடுவகே, சீனத் துறைமுகத் தொழிலாளர் சிலரைக் காணவேண்டுமென்று விருப்பம் தெரிவித்தார். மாலை 7 மணிக்கு துறைமுகத் தொழிலாளர் கூட்டம் தொடங்கி, நடுநிசிவரை நடந்தது. கூட்டம் முடிவடைய இவ்வளவு நேரம் சென்றமைக்கு முதற் காரணம் கிக்கடுவகே சிங்களத்தில் பேச, அதை பிலிப் ஆங்கிலப்படுத்த, அதைச் சீனத்தில் மொழிபெயர்த்து அதையும் காண்டன் மக்கள் பேசும் ஒருவகையான மொழியில் கூறவேண்டி நேர்ந்ததேயாகும். சீன மொழி ஒரு விநோதமான மொழி. எழுத்து நடையில் சீனம் ஒரே மொழிதான் எனினும், பேச்சு வழக்கில் பாகுபாடுகள் காணப்பட்டன. கிக்கடுவகே பல கேள்விகள் கேட்டுப் பதில் தெரிந்து கொண்டார். சீனத்தொழிலாளர்

வாழ்க்கைநிலை பற்றி பல கேள்விகள் கேட்டார். செப்டெம்பர் 18-ம் நாள் ரெயில்வே தொழிலாளர் விடுதிகள், களியாட்டக் கழகங்கள், குழந்தை சுகாதார நிலையங்கள் முதலியவற்றைச் சென்று பார்வையிட்டோம். அனைத்தும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் காணப்பட்டன. குழந்தை நிலையமொன்றைப் பார்வையிடச் சென்றபொழுது, சிறுவர்கள் இன்னிசை வரவேற்பு வழங்கினர். அவர்களின் சொகுசான சுகவாழ்வைக் கண்டு மகிழ்ந்தோம்.

சுத்தமான வீதிகள்

கொழும்பைவிடப் பெரிதான பட்டணம் காண்டன். மக்கள் தொகையும் மிக அதிகம். அப்படி இருந்தும் காண்டன் பட்டணம் வெகு சுத்தமாக இருப்பது போற்றற்பாலது. வீதிவீதியாக வலம் வந்தோம். கூட வந்த நண்பர் சமரக்கொடி, தெருக்களின் எந்தப் பகுதியிலும் உணவுவைத்து அருந்த முடியுமே எனக் கூறினர். இது அந்தப் பட்டணத்தின் தெருக்கள் அத்தனையும் இருந்த சுத்தமான நிலையையே காட்டுகிறது. பட்டணத்தில் வாழும் மக்களுடைய உற்சாகமும், நேர்மையான ஒத்துழைப்புமில்லாமல், பட்டணத்தை இவ்வளவு சுத்தமாக வைத்திருப்பதென்பது முடியாத காரியமே.

நாங்கள் சில வீடுகளுக்குள் சென்றோம். சென்ற இடமெல்லாம் தேநீர் தந்து வரவேற்றனர். சீனியோ, பாலோ, சீனுவில் தேநீருக்குச் சேர்ப்பது கிடையாது. முதலில் அருந்துவது கஷ்டமாக இருந்தபோதிலும், சில நாட்களில் பழகிக்கொண்டோம். ஒரு வீட்டில் ஒரு பெண் குழந்தை மிகுந்த உற்சாகத்துடன் சமையலறைக்கு ஓடி தேநீர் கொணர்ந்தாள். வீட்டிற்குள் திரும்பவும் ஓடிய இச்சிறுமி, கையில் மாசே—துங்கினுடைய படத்

துடன் திரும்பி வந்து மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள். சுதந்திரத்தையும், வாழ்க்கையில் மகிழ்ச்சியையும், நெடு நாளாகக் கஷ்டப்பட்ட சீன மக்களுக்குத் தேடித் தந்த எங்கள் தலைவர் 'மாஓ' சீன மக்கள் மனதில் வாழ் கின்றார் என்று கூறினாள். அக்குடும்பத்தைவிட்டு விடைபெற்றுக்கொள்ளும் பொழுது, அந்தக் குழந்தை என் மனைவியைக் கட்டி முத்தமுட்டுக் கூவினாள். "இலங்கை சீன மக்கள் நல்லுறவு நீடூழி வாழ்க!' உலக சமாதானம் நீடூழி வாழ்க! தலைவர் 'மாஓ' நீடூழி வாழ்க!" என்று ஆர்ப்பரித்தாள்.

மாலையில், கடைகளைச் சுற்றிப் பார்க்கப் போனோம். விலைகள் குறிப்பிடப்பட்டு நிர்ணயித்துக் காணப்பட்டன. விலைகளைப்பற்றி விவாதிப்போர் யாரும் கிடையாது. பலதிறப்பட்ட பண்டங்களும் அங்கே கிடைத்தன.

மூன்றும் அத்தியாயம்

ஷாங்காய் நகருக்குப் புறப்பட்டோம்

மாலை 6 மணியளவில் காண்டன் நகர சமாதான குழுத் தலைவர், துணைத் தலைவர், சீன சாரணரியக்கத்தினர் அனைவரும் வழியனுப்ப, காண்டனைவிட்டுப் புறப்பட்டோம். இலங்கை தூதுக் குழு சார்பாக கிக்கடுவகே, காண்டன் சமாதான குழுத் தலைவருக்கு ஒரு மாலை சூட்டி, பதாகை ஒன்றையும் அன்பளிப்பாகக் கொடுத்தார், குறுகிய காலத்தில் பல நண்பர்களைப் பெற்ற நான் காண்டனைவிட்டுப் புறப்பட மிகவும் கவலைப்பட்டேன்.

பிரயாண வசதிகள் சிறந்த முறையில் அமைக்கப் பெற்று இருந்தமையினாலும், காட்சிகள் நம்மைக் கவர்ந்தமையினாலும், காண்டனிலிருந்து ஷாங்காய் வரை போய்ச் சேர இரண்டுநாட் சென்ற பொழுதிலும், ஒருவிதமான துன்பமும் தோற்ருத முறையில் போய்ச் சேர்ந்தோம். சீன சமாதானக் கமிட்டி அங்கத்தினரான திரு. யங் அவர்களும் எங்களோடு பிரயாணம் செய்தார். அவர் தவிர, இரு மொழிபெயர்ப்பாளர்களும் (இருவரும் பெண் மணிகள்) எம்முடன் வந்தனர். அந்த யுவதிகள் இருவருள் ஒருவர் 'ஷாங்காய்' பல்கலைக்கழக ஆங்கிலப் பட்டதாரி எனவும், மற்றையவரும் அதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர் எனவும் அறிந்தோம். விடுமுறை காலத்தில், மொழிபெயர்ப்பாளராக இருந்து சமாதான மகாநாட்டிற்குத் தொண்டுபுரிய முன்வந்த இவர்கள், சீனப் புரட்சியின் உண்மைத் தத்துவங்களை எடுத்து விளக்கினர். இடையிடையே 'மாசே—துங்' பற்றிக் கூறும்போதெல்லாம்,

அம்மாபெரும் தலைவர்பற்றி அவர்கள் கொண்டிருந்த பெருமை, எல்லையற்ற அன்பு, அபிமானம் முதலியன அவர்கள் கண்களில் பிரகாசித்தன.

"கோமின்—டாங்" நோட்டுக்கள்

இரயில் பிரயாணத்தின்போது திரு பண்டார நாயக்காவும், எட்மனும் நானும் பழைய சீனத்தில் ஆறு ஆண்டுகளுக்கு அதிகமாக இருந்தவரென்று நம்மிடம் கூறிய வோல்டர்ஸ்லே என்ற அமெரிக்கப் பிரயாணியிடம் பேசிக்கொண்டே இருந்தோம். அவர் ஓர் பொறியியல் (இன்ஜினியர்) வல்லுநர். சீனவில் பலவகையிலும், பல பாகங்களிலும் புரட்சிக்கு முந்தியும் பிந்தியும் கடமையாற்றி சீனமொழியை சுலபமாகக் கற்றுக்கொண்ட இவர் பழைய சீனவின் அரசாங்க நிலைமையை எடுத்துச் சொல்லும்பொழுது பயங்கரமாகவே இருந்தது. அந்தக்காலப் பொருளாதார சீர்குலைவை எடுத்துக்காட்ட அவர் கூறிய ஒரு கதையே போதுமானது. ஒரு முறை உணவருந்த ஹோட்டலுக்குச் சென்ற இவர், உணவு விலைப்பட்டியலைப் பார்த்துவிட்டு உணவு உட்கொள்ள அமர்ந்தார். அந்நேரத்தில் பரிமாறுபவர் உள்ளே வந்து விலைகள் இரட்டித்துவிட்டன என்று கூறினர். சாப்பாட்டின் முடிவில் விலை மூன்று மடங்காகிவிட்டது. கோமிங்டான் நோட்டுக்கள் எப்படிப் பணவீக்கத்தினல் விஷமேறுவதுபோல பாதிக்கப்பட்டன என்பதை அனுபவபூர்வமாக எடுத்து விளக்கினர்.

"நவசீனத்தின் உணர்ச்சிகொண்ட மக்களை அமெரிக்க அணுகுண்டல்ல; உலகத்தின் வேறு எந்தவித சக்தியாலும் அழிக்க முடியாது" என்று கூறி, அத்தகைய நிலையை நிலைபெறச் செய்த அந்த புதிய ஆட்சி முறையைப் பெரிதும் பாராட்டினர். கொரியப் போர்

பற்றிய உண்மையை அமெரிக்காவில் ஆட்சிபுரியும் பிற்போக்குக் கும்பல் வானொலி, பத்திரிகை முதலியவற்ருல் திரித்துக் கூறி, மக்களை ஏமாற்ருமல் உண்மையை அறிந்து கொள்ளவிட்டிருந்தால், அமெரிக்கப் பொதுமக்கள் தங்கள் அரசாங்கத்தின் இன்றைய கொள்கைகளை ஒரு போதும் ஏற்க மாட்டார்கள் என்றும் இந்த அமெரிக்க நண்பர் கூறினர். அமெரிக்கர் கொரியாவில் கிருமிப்போர் நடத்துவது உண்மைதானு? என்று நான் கேட்ட கேள்விக்கு, "அதில் எட்டுணையும் சந்தேகமேயில்லை" என்று பதில் கூறினர். "அமெரிக்கப் பொதுமக்கள், ஆக்கிரமிப்பும் ஏகாதிபத்திய வெறியும் கொண்ட கொள்கையை அமுல் நடத்திவர என்றும் விட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள் என்றும் அவர் ஆவேசமாகக் கூறினர். இந்த அமெரிக்க நண்பரைப் பின்னுல் சமாதான மகாநாட்டில் அமெரிக்கக் குழுவின் உறுப்பினராக நான் கண்டபோது பெரிதும் மகிழ்ச்சி அடைந்தேன்.

20-ம் தேதி மாலை சீனுவில் மட்டுமல்ல; உலகத்திலேயே பெரிய பட்டினங்களில் ஒன்ருன 'ஷாங்காய்' என்ற நகரில் இரயில் மூலமாக வந்தடைந்த எங்களுக்கு ஷாங்காய் சமாதானக் குழுவின் துணைத் தலைவர் சாயன், இன்னும் பலர் அமோகமான வரவேற்பு அளித்தனர். பீக்கிங் சமாதான மகாநாடு ஒத்திவைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும், அவ்வாறு நடைபெருமல் இருக்கவே உடனடியாக ஷாங்காய் விட்டு நாங்கள் புறப்பட்டோம். 16 மாடிகள்கொண்ட ஒரு பெரிய ஹோட்டலில் தங்கி யிருந்தோம். ஷாங்காய் சமாதானக் குழுவினர் எமக்கும், நியூசிலாந்து தூதுக் குழுவுக்கும் விருந்துபசாரம் தந்து வரவேற்றனர். சாயன், சமாதான மகாநாட்டின் வெற்றிக்காக வாழ்த்துத் தெரிவித்தார். திரு. எ. சி. மொன்றேற் என்ற நியூசிலாந்து தூதுக் குழுத்

தலைவர், இலங்கை சார்பில் பிலிப், எட்மன் ஆகிய இருவ ரும் வரவேற்புக்கு நன்றி கூறி, சமாதான இயக்கத்தை வலுப்பெறச் செய்வதாகவும், சீன மக்கள் சாதனைகளைப் பெரிதும் போற்றுவதாகவும் கூறினார்கள். இரவு ஆகாரத் துக்குப் பின்பு ஷாங்காயைவிட்டுப் புறப்பட்டுத் திங்கள் காலை 5 மணிக்கு ஒரு இரயில் நிலயத்தை வந்தடைந் தோம். 'சமாதானம் நீடூழி வாழ்க' என்ற கோஷம் ஒலிக்க, குளிர் வாட்டும் காலை நேரத்திலும் இளங்குழந்தை கள் நூற்றுக்கணக்கில் நின்று வரவேற்ற அந்தக் காட்சி, நவசீனத்தின் புத்துணர்ச்சியை நன்றாக உணர்ந்து கொள்ளத் துணைபுரிந்தது.

பீக்கிங் வந்தடைந்தோம்

சீனச் சக்கரவர்த்திகளினது தலைநகரமாக அமைந்த பழமைமிக்க பீக்கிங் பட்டினத்தில் இன்றைய சூழ்நிலையில் சிறிது நாள் தங்கியிருக்கப் பெரிதும் விரும்பிய நாங்கள் காலை 9 மணியளவில் பீக்கிங் வந்தடைந்தோம். சீன சமாதானக் குழுவின் சார்பில் பல சீன நண்பர்களும், சோவியத் யூனியன், இந்தியா ஆகிய நாடுகளின் சமாதான தூதர்களும் எம்மை வரவேற்கத் திரண்டிருந்த எண்ணற்ற மக்கள் திரளிடையில் காணப்பட்டனர். இலங்கைத் தூதுக் குழுவின் தலைவரான சுவாமி நாரவில்லாவும், செயலாளரான தோழர் சண்முகதாசனும் ஒரு வாரம் முன் கூட்டியே பீக்கிங் வந்திருந்ததால் அவர்களும் அங்கே காணப்பட்டனர். இலங்கை தூதுக்குழுவினர் இரயில் நிலையத்தின் புறத்தே ஒரு புகைப்படம் பிடித்தபின், பீக்கிங் ஹோட்டல் போய்ச் சேர்ந்தோம்.

இந்தியா, பாகிஸ்தான், சோவியத் யூனியன், துருக்கி, இந்தோனேஷியா, பர்மா ஆகிய நாடுகளின் சமாதான தூதர்களும், இன்னும் மாநாட்டின் பிரதிநிதிகள் தொகையில் பாதிக்கு மேற்பட்டோர், பீக்கிங்கிலுள்ள பெரிய ஹோட்டல்களில் ஒன்றான இந்தப் பீக்கிங் ஹோட்டலில் தங்கியிருந்தார்கள். எஞ்சிய பிரதிநிதிகள் 'சமாதான விடுதி' என்ற ஹோட்டலில் தங்கினர். இது சமாதான மாநாட்டிற்கென 17 வாரங்களில் கட்டி முடிக்கப்பட்ட ஒரு விடுதி. இது 10 அடுக்கு மாடி வீடுகளுடன், ஒரு சினிமா மண்டபமும் கொண்டு விளங்கியது. மா



இலங்கை தூதுக்குழுவினர் பீக்கிங் இரயில் நிலையத்தை வந்தடைந்தபோது எடுத்த படம்.

மக்கள் சீனக்குடியரசின் மூன்ருவது ஆண்டுவிழா அணிவகுப்பின்போது,
சீனச்சிறுமிகள் சமாதானப் புருக்களுடன் காட்சியளிக்கின்றனர்

நாடு தொடங்கும்வரை, தூதுகோஷ்டிகள் வந்தவண்ணமாக இருந்தன. ஒவ்வொரு தூதுக்குழுத் தலைவரிடமும் ஒவ்வோர் மோட்டார் ஒப்படைக்கப்பட்டு இருந்தது.

அடுத்த சில தினங்களில் ஏனைய சமாதான குழுத் தலைவர்களைச் சந்தித்து தனிப்பட்ட முறையிலும், கூட்டு முறையிலும் பொதுப் பிரச்னைகளைப்பற்றியும், சமாதானத்தை வளர்க்கும் வழிகள்பற்றியும் உரையாடினோம். அத்தகைய விவாதங்களில், ஐவர் மாண்டேகு என்ற பிரிட்டிஷ்காரருடனும் (உலக சமாதானக் கவுன்சில் செயலாளர்), புகழ்பெற்ற துருக்கி நாட்டு நாஜிம் ஹிக்மத் என்ற கவிஞருடனும் நாங்கள் நடத்திய சம்பாஷணைகள் எங்கள் அறிவை மிகவும் விசாலிப்பதாய் அமைந்திருந்தன.

உலக சமாதான இயக்கம்பற்றி மாண்டேகுவும், தேசீய விடுதலைபற்றி ஹிக்மத்தும் பேசியதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் எட்மென், கெக்டர் ஆகிய இரு இலங்கை நாட்டவர்களும் அக்கரை காட்டி பங்கு கொண்டனர்.

இலங்கை அமைச்சர் சந்திப்பு

இலங்கை சமாதனக்குழு தங்கியிருந்த பீக்கிங் ஹோட்டலுக்கு 24-ம் நாள் மாலை இலங்கை வியாபாரக் குழுவின் துணைத் தலைவரான சுசந்தா டீ பொன்சேகா வந்து எம்மைச் சந்தித்தார். 'உங்கள் தூதுஅலுவல் எந்த வகையில் முன்னேறுகிறது?' என்று கேட்டதற்கு, வெற்றிபெறும் என்று பதிலளித்தார். இலங்கையில் அரிசிபற்றி பெரிய வட்டாரங்களில் நிலவிவரும் அபிப்பிராய பேதங்களையும் எடுத்துக் கூறி, வந்த நோக்கம் நிறைவேறும் என்றும் அபிப்பிராயப்பட்டார். பீக்கிங்கி

லுள்ள 'சர்வ தேசிய ஹோட்டலில்' அடுத்தநாள் நடக்க விருந்த ஒரு விருந்திற்கு இலங்கை சமாதானக் குழுவை யும் வந்து பங்குகொள்ளுமாறு வேண்டிக்கொண்டார். இலங்கை வர்த்தக அமைச்சரும், இலங்கை வர்த்தக தூதுக் குழுவின் தலைவருமான ஆர். ஜி. சேனநாயக்கா ஒரு சீன மொழிபெயர்ப்பாளருடன் வந்து விருந்துக்கு வரும்படி எம்மை அழைத்தார். நாம் இந்த அழைப்பை ஏற்ற பொழுதிலும், விருந்துக்குப் போவதா என்பது பற்றிய ஒரு முடிவிற்கு உடனடியாக வரவில்லை.

இலங்கை சமாதானக் குழுவைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்தின் தூதுக்குழுவினது விருந்து உபசார அழைப்பை ஏற்றுக்கொள்ளலாமா? அது சரியா? என்பது பற்றி அபிப்பிராயபேதம் நிலவியது. எட்மனும், கெக்டரும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று அபிப்பிராயப் பட்டனர். காரணம் இலங்கையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாம் அங்கு அரசாங்கத்தின் விருந்து அழைப் புக்களை ஏற்க மறுத்திருக்கும்பொழுது, சீனவில் வந்து எதற்காக இலங்கை வழக்கத்தைக் கைவிட வேண்டு மென்று கேட்டனர். வேறு சிலர் அது வியாபாரக் குழு வின் அழைப்பு அல்லவென்றும், அது தனிப்பட்ட முறை யில் தரப்பட்ட அழைப்பு என்றும், விரும்பினோர் போக லாம் என்று அபிப்பிராயம் தெரிவித்தனர். இன்னும் சிலர் அரசாங்கத்துடன் அபிப்பிராய பேதமிருந்தாலும், சீனவுடன் வியாபார வளர்ச்சி குறித்து வந்த ஒரு தூதுக்குழுவை முழுதாக ஆதரிக்க வேண்டுமென்று வாதித் தனர். சமாதானக் குழுவினர், அரிசி தூதுக்குழுவுடன் அளவளாவுவது, சீன அரசாங்கத்தைச் சீக்கிரமாகவே ஒரு வியாபார ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தூண்டும் என்றும் இவர்கள் கூறினர். இன்னும் இலங்கை சமா தான இயக்கத்தின் குறிக்கோள்களில் ஒன்று, சோவியத்

ருஷ்யா, சீனு போன்ற நாடுகளுடன் வியாபாரத்தை அதிகரிக்கச் செய்வதாகும் என்றும், அத்தகைய ஒரு நல்ல கொள்கையுடன் வந்துள்ள தூதர்களோடு ஒத்துழையாமல் இருப்பது தவறு எனவும் கருதினர். நீண்ட நேர விவாதத்தின்பின் அழைப்பை ஏற்றுக்கொள்வது என்று ஏகோபித்த முடிவிற்கு வந்தோம்.

பீக்கிங்கிலிருந்து 20 மைல் தூரத்திலிருந்த 'செவெஸ்டியல்' என்ற கோடை மாளிகையைப் போய்ப் பார்த்தோம். அழகான கட்டிடங்கள், தடாகங்கள், எண்ணற்ற பூங்காக்கள்—இவையாவும் அன்று சீன மன்னர்களுக்காக இருந்தன. ஆனல் இன்ருே அவை மக்கள் மயமாக்கப்பட்டுவிட்டன. ஓய்வுக்காக வந்து தங்கும் தொழிலாளர்களில் சிலரை இந்த மாளிகையில் கண்டேன்.

நவசீனத்தில் தொழிலாளர்கள் எந்தத் தொழில் செய்தாலும், அவர்கள் 'வந்தனை' செய்து போற்றப் பட்டனர்.

நானும் அங்கே இருந்தேன்

அன்று மாலை 'சர்வதேச ஹோட்ட'லில் நடந்த விருந்துபசாரத்திற்குப் போயிருந்தோம். அங்கு குமாரசாமி அவர்கள் தம்முடைய வழக்கமான நகைச்சுவையுடன் பேசினுர். இலங்கையிலுள்ளோர் சிறுபிராயத்தில் சீனுவைப்பற்றித் தெரிந்து கொள்வது சீன வெடியின் மூலமாகத்தான். குமாரசாமி அவர்கள் சீன வெடிகளை வீட்டிற்குக் கொண்டுபோகும்படி என் மனைவியிடம் தமாஷாகச் சொன்னுர். அங்கு இலங்கை சமாச்சாரப் பகுதியினரால் இலங்கைத் திரைப்படம் ஒன்று காண்பிக்கப்பட்டது. பல சீன வெளிநாட்டு ராஜதந்திரிகள் வந்

திருந்தனர். சேனநாயக்கா எங்களிடம் விடைபெற்றுக் கொள்ளும் சமயம், என்னிடம் கைலாகு கொடுக்க வந்த பொழுது, இலங்கை அரசாங்க ஊழியர் போராட்டத்தில் பொதுச் செயலாளராக இருந்த என்னை வேலையிலிருந்து சேனநாயக்கா அரசாங்கம் நீக்காவிட்டால், நான் பீக்கிங் கில் மந்திரியின் மதிப்பிற்கு உரியவனாக இருந்திருப்பேனா என்ற கேள்வி எனக்குள் தோன்றியது. அநீதியான முறையில், என்னை வேலையிலிருந்து நீக்காவிட்டால், நான் ஓர் ஏழைக் குமாஸ்தாவாக வாழ்ந்திருப்பேனே ஒழிய, பீக்கிங், மாஸ்கோ போன்றவை என் கனவிலும் தோன்றி யிருக்கமாட்டா. சேனநாயக்காவின் பார்வை என்மீது படியும்போது, ஒரு தடவை கண்ணிமைத்தார். "நீயுமா இங்கே வந்திருக்கிறாய்!" என்று கேட்பதுபோல, இருந் தது அவர் பார்வை. ஆம்! நானும்தான் வந்திருக்கிறேன்! ஏழைக் குமாஸ்தாக்கள், பொதுமக்கள், தொழிலாளர் கள் வாழ்க்கையில் வளமும் சமாதானமும், வியாபார வளர்ச்சியும் வேண்டி நிற்கும் மக்கள் குலத்தின் பிரதிநிதியாக, பீக்கிங்கிற்கு வந்திருக்கிறேன் என்பது போல நானும் பார்த்தேன்.

சீனப் பெரும் சுவர்

ஒரு தனி இரயிலில் அடுத்த நாட் காலை உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருமதிலைப் பார்க்க சமாதானத் தூதர்களாகிய நாங்கள் அனைவரும் சென் றிருந்தோம். புகையிரதம் 10 மணிக்குப் பீக்கிங்கை விட்டுப் புறப்பட்ட இரண்டு மணி நேரத்தில், சீனப் பெரு மதில் எல்லையை வந்தடைந்தது. ஒரு மைல் கால் நடை யாகச் சென்ற பின், மதிலை ஏறப் பலர் முயற்சித்தும் சிலர் தான் வெற்றி பெற்றனர். மதில்மேல் நின்று பார்க்கும் பொழுது, மதிலமைப்பின் வளைவு நெளிவுகள் பல வெகு

தூரத்தில் தென்பட்டன. பல நூற்றுண்டுகளுக்கு முன் இவ்வளவு அருமையான ஓர் மதிலைக் கட்டியது ஓர் விநோதமே. ஆனால் நவசீனத்திலுள்ள பெருமதிசயம் பெருமதில் அல்ல; நவசீனத்தின் புதுமனிதனும் அவன் அமைத்த புது சமுதாயமுமே.

சக்கரவத்திகள், அவர் குடும்பத்தினர் வழிபட்ட "மோட்ச ஆலயத்தை" அடுத்த நாள் போய்ப் பார்த்தோம். இந்தக் கோவிலின் எல்லைக்குள் அன்று ஏழைகள் அடிவைக்க முடியாது. ஆனால் இன்று பல்லாயிரக் கணக்கான மக்கள் திரளும் அக்டோபர் முதல் தேசிய திருவிழா இங்கு நடப்பதாக இருந்தது. சீனப் படையினர் ஆயிரக்கணக்கில் அணிவகுத்து அதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தனர்.

நான் ஹாங்கொங்கில் பார்த்த பிரிட்டிஷ் படை வீரருக்கும், இந்த நவசீனப் போர்வீரருக்கும் முகப்பொலிவில் எத்துணை வேற்றுமை! சீன விடுதலைப் போர் வீரரைச் சீனமக்கள் கண்ணின் கருமணிபோல் போற்றுகின்றனர். நன்னடத்தையினாலும், தன்னலமற்ற தேசப் பற்றினாலும், மக்களன்பையும் அபிமானத்தையும் பெற்றுச் சென்ற இடமெல்லாம் சிறப்புடன் வரவேற்கப் படுபவராக இந்த வீரர்கள் காணப்பட்டனர். கொள்கைக்காக, தமது வாழ்க்கைக்காக, நாட்டிற்காக, வருங் காலச் சந்ததிக்காக தாம் போராடுகிறோம் என்பதை நன்கு உணர்ந்திருக்கின்றார்கள் இவ்வீரர்கள். இவர்களின் முகாம்கள் சுத்தமாகவும் அழகாகவும் அமைந்திருந்தன. அந்த வீரர்களை நாங்கள் வணங்கினோம்; அவர்களும் பதிலுக்கு வீராஞ்சலி செய்தனர்.

'சீனத் தேசிய தினம்' நெருங்கியது. அனைவரும் உணர்ச்சி வெள்ளம் பெருக, தோழமை உள்ளம்

துடிக்க அந்நன்னுள் என்று வருமோ என ஏங்கினின்றனர். தலைவர் மாசேதுங்கின் அழைப்பிதழ் எங்களை மட்டற்ற ஆனந்தத்தில் மூழ்கடித்தது. செப்டம்பர் முப்பதாம் நாள் மாலை ஏழு மணியிருக்கும். விருந்துபசார மண்டபத்தைச் சென்றடைந்தோம். நூற்றுக்கணக்கான விருந்தினர்கள், வெளி நாட்டு ராஜதந்திரிகள், சிறந்த தொழிலாளர், சீன தேசிய இனங்களின் பிரதிநிதிகள், கலைஞர்கள், அரசாங்க ஊழியர்கள், இன்னும் எத்தனை எத்தனையோ பிரதிநிதிகள் மண்டபம் நிறைந்து வழிய நின்றனர். தலைவர் 'மாஓ'வினிடம் சமாதானக் குழுத் தலைவர்கள் ஒவ்வொருவராக அறிமுகப் படுத்தப்பட்டனர். ஜனத்திரளின் மத்தியில், இலங்கை வியாபாரத் தூதுவர் சேனநாயக்காவையும் கண்டேன்.

தலைவர் 'மாஓ' தந்த விருந்து

மணி 7 இருக்கும். தலைவர் மாசே-துங் 2000 விருந்தினருக்கு மத்தியில் பேசத் தொடங்கினர். கையொலி எங்கும் எதிரொலித்தது. மக்கள் மனப்பீடத்தில் வீற்றிருந்து, எங்கெங்கும் அன்புடன் பேசப்படுகின்ற மாபெரும் தலைவனைக் காண, பல தலைகள் ஒன்ருேடு ஒன்று முட்டி, எட்டி, போட்டி போட்டன. சீன மக்களின், மனித குலத்தின் ஒப்பரிய தலைவரைச் சுற்றிச் சீன அரசாங்க ஊழியர்கள், பெருமந்திரிகள், முதல் அமைச்சர் சௌ—என்—லாய், தளபதி சூட்டே போன்ருேர்கள் காணப்பட்டனர். தலைவர் சில நிமிட நேரம் பேசினர். அது ஆங்கிலத்திலும், ஸ்பானிய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டது. குழுவினரை வரவேற்று சில வார்த்தைகள்; சீன மக்கள் வெற்றிபற்றி அவர் கருத்துக்கள். அதன் முடிவிலே "சீன மக்கள் ஒற்றுமை வாழ்க! சீன சோவியத் நல்லுறவு வாழ்க! சீன மங்கோலியக் குடியரசு

மக்கள் ஐக்கியம் ஓங்குக! உலக மக்கள் ஒற்றுமை நீடூழி வாழ்க” என்ற கோஷங்களின் முடிவில், 2000 விருந்தினரும் மகிழ்ச்சி பொங்க ஆர்ப்பரித்தனர்.

சில நிமிடங்களுக்குப்பின் ‘மாஓ’வின் அருகில் போய்ச் சேர்ந்து, உணர்ச்சியும் உற்சாகமும் தந்த அவர் முகத்தைப் பார்த்து மகிழ்ந்தேன். சீன முதல் அமைச்சர் சௌ-என்-லாய் விருந்தினர் மேசையருகில் வந்து உபசரித்துப் பேசினர். ரத்தினவீராவும் நானும் அவரைப் பின் தொடர்ந்தோம். சேயைப் பற்றும் தாயைப்போல எங்கள் மேசைக்கும் வந்தார். சீன அயல்நாட்டு நல்லுறவை வளர்க்க வாய்த்த அந்த நல்ல தருணத்தை நழுவவிடாமல், சீன மக்களும் நாங்களும் அதனைப் பயன்படுத்தினேம். அந்நன்னுள் உண்மையாகவே ஒரு பெரு நாளாகும். பாட்டும், மட்டற்ற மகிழ்ச்சியும் பொங்க எங்கள் விடுதி வந்து சேர்ந்தோம்.

சீன தேசியத் தினம்

அடுத்த நாள் காலை பீக்கிங் பட்டினத்தின் நடுப் பகுதியில் இருந்த ஒரு மைதானத்தில் தேசிய விழா 10 மணிக்குத் தொடங்க இருந்தது. அரைமணி நேரத்துக்கு முன்பு, பார்வையாளருக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் நாங்களும் போய் நின்றேம். சமாதானத் தூதுக் குழுவினர், அன்னிய அரசாங்கத் தூதுவர் அனைவரும் பார்வையாளர் பகுதியில் காணப்பட்டனர். மணி பத்து இருக்கும். மாசே-துங் மந்திரியார் புடைசூழ கையொலி முழக்கத்தின் மத்தியில் வந்து நின்றூர். படைத் தளபதி சூட்டே அணிவகுத்து நின்ற சேனையைப் பார்வையிட்டபின், உரை நிகழ்த்தினர்; அதையடுத்து சீனப் படையினர் அணிவகுப்பு நிகழ்ந்தது. போர்த்தளவாடங்கள், துப்பாக்கிகள், உலகத்தின் அற்புதமான படைக் கருவிகள் பல தாங்கி

வீர நடை போட்ட சீனப் படையினர் தாம் உலகத்தில் எந்த வீராதிவீரர்க்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதைக் காட்டினர்.

படை அணிவகுப்பைவிட, ஏராளமாகத் திரண்டு நின்ற சீன மக்களின் கூட்டம் என்னைப் பெரிதும் கவர்ந்தது. இலட்சக்கணக்கான மக்கள், தலைவர் 'மாஓ'வுக்கு மரியாதை செலுத்தி ஆர்ப்பரித்த காட்சியை என்னால் என்றும் மறக்கமுடியாது. குழந்தைகளும், பெண்களும், ஆண்களும், தொழிலாளரும் குவிந்து நின்றார்கள். நூற்றுக்கணக்கான கொடிகள், ஆலவட்டங்கள் காற்றில் அசைந்தன. கோஷங்கள் வானை எட்டின. ஒவ்வொரு வரது அகத்திலும் அலைவீசிக் கொண்டிருந்த ஆனந்தம் முகத்திலே உணர்ச்சி மிகுந்த புன்னகையாக மலர்ந்திருந்தது. அனைத்தும் இப்பொழுதும் என் மனதில் அப்படியே பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது. இக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த போது, "எந்த மடையன் தான் சீன மக்கள் இன்னும் விடுதலை பெறவில்லையென்று கூறுவான்? எந்தத் துரோகிதான் மாசே-துங் ஸ்டாலினுடைய கைப் பொம்மை என்று கூறுவான்?" என்ற அக்கேள்விகள் என் மனதில் ஊசலாடின. சிறுவர்கள் பலர் கையில் சமாதானப் புருக்களுடன் மட்டில்லா மகிழ்ச்சியோடு, "மாசே-துங் வாழ்க!" என்று கோஷமிட்டு நின்றனர். இத்தனையும் கண்டபின் சீன மக்களுடைய வருங்காலத்தைப்பற்றி எந்த அசடுதான் ஐயமுறமுடியும்? வெள்ளை உடையணிந்திருந்த அச்சிறுர்கள் புருக்களைக் கையில் வைத்திருந்த தோற்றம் அவர்களை தேவதைகளைப்போல் தோன்றச் செய்தது. இக்காட்சி நிற்போர் மனதைக் கொள்ளைகொண்டு, ஓடியணைத்து அச்சிறுர்களுக்கு முத்தம் கொடுக்கலாமா என்று எண்ணச் செய்தது. கையில் புருவுடன் சென்ற குழந்தைகள் சில



டின் அன் மென் சதுக்கத்தின் முன்பு விளையாட்டு நங்கைகள் அணிவகுத்துச் செல்வது.

டின் அன் மென் சதுக்கத்தில், தொழிலாளர்கள் திரண்டு செல்லும் காட்சி,

சமயங்களில் அவற்றை வானத்தில் பறக்கவிட்டது கண் கொள்ளாக் காட்சி ஆகும். சில புருக்கள் கூட்டத்தின ரிடையே வலம் வந்து அமர்ந்தன. ஒரு புரு தலைவர் 'மாஓ' வினுடைய தோளிலே போயமர்ந்தது. ஐந்துமணி நேரம் அலுப்புத் தட்டாமல் நின்று பார்த்தோம். சிறுவர்கள் புருக்களை விடுதலை செய்த காட்சி, தலைவன் 'மாஓ' பல நூற்றுண்டுகளாக சீன மக்களைப் பிடித்திருந்த நிலப் பிரபுத்துவச் சுரண்டல், வறுமை என்பவற்றின் கோரப் பிடிப்பினின்று அவர்களை விடுவித்துச் சுதந்தர சூரியன் பிரகாசிக்கும் சுபீட்சப் பாதையில் வழிநடத்திச் செல் வதை என் கண்முன் பிடித்து நிறுத்தியது.

மைதானத்திலும், பட்டினத்தின் பல பாகங்களிலும் வாண வேடிக்கைகள் நடந்தன. பரந்த வெளிகளில் நடந்த நடனங்களைப் பார்க்கச் சென்றிருந்தோம். அங்கு எங்களை யும் ஆடவைத்து விட்டனர், அன்பின் மிகுதியினுல். சில இலங்கைப் பாட்டுக்கள் பாடப்பட்டன. ரத்தினவீரா, சீன தேசிய கீதத்தைப் பாடியபொழுது, எல்லோரும் "அருமை! அருமை!" என்று ஆர்ப்பரித்தனர். நள்ளிரவுவரை நடனமும் பாட்டும் தொடர்ந்தன. சீன மக்களுடைய உற்சாகம் எங்களை அந்த இடத்தை விட்டுச் செல்லாமல் தடைசெய்து விட்டது.

பீக்கிங் சமாதான மாநாடு

அடுத்த நாட் காலே (2–10–52) ஆசிய பசிபிக் பிராந்திய சமாதான மாநாடு தொடங்கியது. 37 நாடுகளிலிருந்து வந்த 400 தூதர் இதில் பங்கு கொண்டனர். இவ்விழாவில் ஆஸ்திரேலியா, பர்மா, கனடா, இலங்கை, சில்லி, சீனு, கொலம்பியா, கோஸ்ட்டாரீக்கா, சைப்பிரஸ், ஈக்குவெடர், எல்சல்வெடோர், கௌதிமாலா, கண்டுராச், இந்தியா, இந்தோனேசியா, ஈராக், இஸ்ரேல், யப்பான், கொரியா, பாதெட்லாவோ, லேபோனன், மலேயா, மெக்சிக்கோ, மங்கோலியா, நியூசிலாந்து, நிக்கராகுவா, பாகிஸ்தான், பனுமா, பேரு, பிலிப்பயின்ஸ், சிரியா, தாய்லாந்து, துருக்கி, ருஷ்யா, அமெரிக்கா, வியட்நாம் முதலிய நாடுகள் கலந்துகொண்டன.

மாநாட்டின் செயற்குழு விடுத்த பிரகடனத்தின்படி, ஆசிய பசிபிக் பிரதேசங்களில் வாழுகின்ற 160 கோடி மக்களின் சமாதானக் குரலே இம்மாநாடு.

உலக சமாதானக் கவுன்சில் துணேத் தலேவர் கப்பிரியல் டி ஆர்போன்சியர், செயலாளர் ஐவர் மாண்டேகு, உலகத் தொழிற் சங்க சம்மேளனத்தின் செயலாளர் லியூகி கிராசி, ஆசிய, ஆஸ்திரேலிய வெளி விவகார உலகத் தொழிற் சங்க ஊழியர் திரான்டன், சர்வ தேசீய மாதர் ஜனநாயக சம்மேளனத்தின் துணேப் பொதுச் செயலாளரான கார்மன் சாந்தி, சர்வ தேசீய ஜனநாயக வழக்கறிஞர் சங்கத்தின் பொருளாளரான லூசீனிபாவுவி ஓக்ஸ், உலக ஜனநாயக வாலிபர் சம்மேளனத்தின் உறுப்பினரான சின் சான் சியாங், சர்வ தேசீய மாணவர் சங்கத்தின் துணேத் தலேவரான ரேவியல் இசி வேரியா முதலான

பலரும் மாநாட்டில் கலந்து கொண்டனர். சர்வ தேசிய "ஸ்டாலின் பரிசு" பெற்ற திருமதி மோனிக்கா வெல்டன் அழைக்கப்பட்டிருந்த விருந்தினரில் ஒருவராவர்.

தொடக்கக் குழுவின் பொதுச் செயலாளரான லியூ நிங்-கி, அதுவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கை பற்றிக் குறிப்பிட்டார். மாநாட்டுத் தலைவர்களாகச் செயலாற்ற சூங் சிங்-லிங் (சீனு), டாக்டர் கிச்சுலு (இந்தியா), மொகமது இப்திகாருதீன் (பாகிஸ்தான்), கிரோசி மினுமி (ஜப்பான்), வல்வெர்டி (கோஸ்றரிக்கா) முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மகிழ்ச்சி தரும் மேள வாத்தியம் முழங்க, சீன சாரண இயக்கத்தினர் தலைமைப் பீடத்தில் அமர்ந் திருந்த அத்தனை பேருக்கும் மலர் தந்து மரியாதை செலுத் தினர். லியூநிங்-கி (சீனு) மாநாட்டின் பொதுச் செயலாள ராகவும், ரோமேஷ் சந்திரா (இந்தியா), தோகோ கமேடா (ஜப்பான்), வேடும் கோசிங்கோவ் (ருஷ்யா), எஸ். காய் (பாகிஸ்தான்). ஜங் சுங் அன் (கொரியா) முதலியோர் துணைச் செயலாளர்களாகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக் கப்பட்டனர்.

திருமதி சன்யாட்-சென் சொற்பொழிவு

சூங் சிங்-லிங் என்ற திருமதி சன்யாட்-சென் அம்மை யார் பலத்த கையொலியின் மத்தியில், "இன்றைய யுத்தங் களை நிறுத்தி, சகல பிரச்னைகளையும் நேர்மையான முறை யில் தீர்த்து வைப்பது; மனித குலத்தைப் பெருமளவில் நாசம் செய்யும் ஆயுதங்களை உபயோகப்படுத்தக்கூடாது என்று தடை செய்வது; கலாச்சார, வியாபார வளர்ச் சிக்கு எதிரிடையாயுள்ள சகல தடைகளையும் முறியடித்து, சர்வ தேசிய ரீதியாகத் தொடர்பு கொள்ளுதல் ஆகிய

கொள்கைகளுக்காக மனித குலத்தை ஒன்று திரட்டி, சமாதானச் சூழ்நிலையில் எந்த நாடும், எம்முறையிலும் வாழ வழி வகுப்பது போன்ற உயரிய கொள்கைகளே நம்முடைய குறிக்கோள்கள்,'' என்று கூறி மாநாட்டைத் திறந்து வைத்தார். பீக்கிங் பட்டினத் தலைவரும், சீன சமாதானக் குழுவின் துணைத்தலைவருமான பெங் சென் மாநாட்டினரை வரவேற்றார்.

டாக்டர் கிச்சுலுவின் தலைமையில் கூட்டிய மாநாட்டிற்கு மாசே-துங், உலக சமாதானக் கவுன்சில் தலைவர் ஜோலியத் கியூரி, உலக சமாதானக் கவுன்சில் உறுப்பினரும், சில்லி நாட்டின் புகழ்பெற்ற பாவலருமான பாப்லோ நெரூடா, உலக சமாதானக் குழு உறுப்பினர் போல் ரேப்சன், உலக சமாதானக் கவுன்சில் பொதுச் செயலாளர் ஜீன் லெப்பித் முதலானோர் அனுப்பிய வாழ்த்துரைகளை மகாநாடு ஆரவாரத்துடன் வரவேற்றது. நிகழ்ச்சி நிரலையும், கூட்ட ஒழுங்குகளையும் ஏகமனதாக மாநாடு ஏற்றுக்கொண்டதன்பின், அதையடுத்துப் பலபேர் பேசினர். இங்கு திருமதி சன்யாட்-சென், சீன துணை முதல் அமைச்சர் கோ-மோ-ஜோ, திருமதி மொனிக்க வெல்டன், புகழ்பெற்ற இந்தியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் கிச்சுலு, இந்தியக் கம்யூனிஸ்ட் தலைவர் ஏ. கே. கோபாலன் ஆகிய பிரமுகர்களைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது.

ஆங்கில எழுத்து வரி முறைப்படி ஆசனங்கள் ஒதுக்கப்பட்ட காரணத்தினால், சீனத்திற்குப் பக்கத்தில் இலங்கைக்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. திருமதி சன்யாட்-சென், கோ-மோ-ஜோ ஆகிய இருவரும் என்னுடைய ஆசனத்திற்குப் பின்னுள்ள ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். இதன் காரணமாக, அவர்களை ஒவ்வொரு நாளும் சந்தித்து மரியாதை செய்யும் வாய்ப்பு எனக்குக்

பீக்கிங் மாநாட்டில், திருமதி சன்யாட்-சென் சொற்பொழிவாற்றுகிறார்.

பீக்கிங் மாநாட்டில் சீனக் குழுவின் பிரதிநிதிகள் : வலதுபுறமிருந்து கோ-மோ-ஜோ, திருமதி சன்யாட்-சென், பீக்கிங் மேயர் பெங் சென், பீக்கிங் பல்கலைக்கழகத் தலைவர் பேராசியர் மா-இன்-சூ.

கிடைத்தது. ஆசிய, தென் பசிபிக் பிராந்திய நாடுகள் எல்லாவற்றினின்றும் அத்தனை தூதர்கள் வந்திருந்தது, சமாதான இயக்கத்தில் எவ்வளவு தூரம் அக்கறை பிறந்திருக்கிறதென்பதைப் பிரதிபலித்தது. அரசியல் தலைவர்கள், அறிவியல் வல்லுநர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள், பத்திரிகாசிரியர்கள், பெண்ணினத் தலைவர்கள், இன்னும் மனித குலத்தின் சகல வாழ்க்கைத்துறைப் பிரதிநிதிகளும் மாநாட்டில் வந்தமர்ந்திருந்தனர்.

சீனத் துணைத் தலைவர் கோ-மோ-ஜோ மேடைமீதேறி மாநாட்டின் இரண்டாவது நாள் வைபவங்களைத் தொடங்கி வைத்தபொழுது, அனைவரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினர். அவருடைய பேச்சில் (1) ஜப்பானில் மீண்டும் ராணுவ வெறி தலைகாட்டாது தடுக்க ஜப்பானியப் பிரச்சினையைப் பரிபூரணமாகத் தீர்த்துவைத்தல், (2) நீதியான—ஏற்றுக் கொள்ளத்தகுந்த முறையில் கொரியப் போரையும், ஏனைய பகுதிகளில் மூண்டுள்ள போர்களையும் நிறுத்துவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்தல், (3) ஐந்து பிரதான வல்லரசுகளுக்கு மத்தியிலும் ஒரு நிரந்தர சமாதான உடன்படிக்கையைச் செய்து கொள்வது, (4) உலக மக்கள்—உலக நாடுகள் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், (5) போர் வெறி யூட்டும் பிரச்சாரம், இனவெறுப்பைத் தூண்டுதல், சமாதான இயக்கத்தை நசுக்க முற்படுதல் முதலியவற்றைக் கண்டித்து அவற்றைச் சட்ட விரோதமாக்க வேண்டுவது முதலியவைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்.

ஜப்பானியப் பிரச்சினைபற்றி தோகோ கமாடா (ஜப்பான்), விக்டர் ஜேம்ஸ் (ஆஸ்திரேலியா) ஆகிய இருவரும் அறிக்கைகள் சமர்ப்பித்தனர். அன்று பிற்பகல் கொரியத் தூதுக்குழுத் தலைவர் கொரிய யுத்தத்தைத்

தீர்த்துவைக்க கொரிய மக்கள் கொண்டுள்ள கருத்துக் களைப் பின்வருமாறு கூறினர் :

(1) 1949-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஜெனிவா ஒப் பந்தத்தின்படி இருதரப்புக் கைதிகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும். அது தேசிய நடைமுறை வழக் கங்களுக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும். இன்னும் கொரியாவில் உடனடியான சமாதான ஒப்பந் தத்தைச் செய்துகொண்டு, நிரந்தரமான சமாதான உடன்படிக்கையைச் செய்ய வேண்டும்.

(2) அமெரிக்கர்கள் கொரியப் பிரச்சினையில் தலை யிட்டதைக் கண்டிக்கிறோம். அவர்கள் கிருமி யுத்தம் தொடுப்பதையும், சமாதானச் சூழ்நிலையில் இருக்கின்ற பட்டினங்களையும் கிராமங்களையும் குண்டு போட்டு நாசம் செய்வதையும் உடனடியாக நிறுத்த வேண்டும். யுத்தவெறி யூட்டும் பாதகர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

(3) கொரிய சமாதான உடன்படிக்கைக்குப்பின், கொரியாவிலுள்ள சீன தொண்டர் படைகள் உள்பட சகல அன்னியப் படைகளும் அந்நாட்டை விட்டு வெளி யேறுவதன் மூலமாக அந்நாட்டின் உள் நாட்டுப் பிரச் சினைகளுக்கு ஒரு முடிவு காண முடியும். மாநாடு பின்வரும் செயற் குழுக்களுக்கு முறையே தலைவர், துணைத் தலைவர்க ளாக நியமிக்கப்பட்டோரை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

செயற் குழுக்களின் விபரம் :

(1) ஜப்பானியப் பிரச்சினை.
(2) கொரியப் பிரச்சினை.
(3) கலாச்சாரத் தூதுவர்.
(4) பொருளாதாரத் தொடர்பு.

(5) தேசிய சுதந்திரம்.

(6) ஐந்து வல்லரசுகள் சமாதான உடன்படிக்கை.

(7) குழந்தைகள் முன்னேற்றம்.

(8) பெண்கள் நல உரிமை.

இந்தோனேஷியத் தூதுக்குழுவைச் சார்ந்த சொரோசோ பொருளாதாரத் தொடர்புபற்றி ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். அவர் ஆசிய, பசிபிக் பிரதேசங்களில் வாழும் மக்கள் எண்ணிக்கை, இயற்கை வளம் ஆகியவற்றை எடுத்துக்காட்டி, ஏகாதிபத்திய அடிமைத்தனத்தினுல் ஏற்பட்ட செயற்கை வியாபாரத் தடைகளை நீக்குவதற்கான வழிமுறைகள் சிலவற்றைக் கூறி, இந்தப் பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கும், மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் பாடுபடுவதன் மூலமாகத்தான் உலக சமாதானத்தை நிலை நிறுத்த முடியும் என்பதை வற்புறுத்தினர். கனடாவைச் சேர்ந்த பின்லே மெக்கென்சியும், இந்தியாவைச் சேர்ந்த கியான்சந்தும் தொடர்ந்து அறிக்கைகள் சமர்ப்பித்தனர். அன்று பிற்பகல் இலங்கைச் சமாதானக்குழுவின் சார்பாக முதன் முதலில் பேசும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. அது பொருளாதாரப் பிரச்சினை பற்றிய ஓர் அறிக்கையாகும். இலங்கை தூதுக்கோஷ்டி சில தினங்களுக்கு முன்னதாக பிலிப் அவர்கள் பிரேரணையின் பேரில் என்னையே அந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி கேட்டமை எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. இருபது நிமிடங்கள் பேசிவிட்டு ஆசனத்தமர்ந்தபோது, திருமதி சன்யாட்-சென், கோ-மோ-ஜோ, பெங் சென் போன்றவர்கள் என்னைப் பாராட்டினர். அது எனக்குக் கொஞ்சம் சங்கடமாகவே இருந்தது. ஏனெனில், அத்தகைய உயரிய மரியாதையைப் பெற நான் தகுதி உள்ளவனே என்று அஞ்சினேன்.

தேசிய சுதந்திரம் பற்றிய அறிக்கையை, சில்லி நாட்டைச் சேர்ந்த திருமதி ஓல்கா பொல் பொப் விட் சமர்பித்தார். "சமாதானம், சுதந்திரம் என்ற இரண்டும், ஆசிய, பசிபிக் பிராந்தியங்களுக்கின்றியமையாதன" என்பதை வற்புறுத்தி அனைவரையும் கவரத் தகுந்த முறையில் ஏ. கே. கோபாலன் பேசினர்.

தகிரா மஷ்கார் என்ற பாகிஸ்தான் பெண்மணி மாநாட்டின் நான்காம் நாளில் பெண்ணின உரிமை பற்றியும், குழந்தைகள் பாதுகாப்புப் பற்றியும் பேசினர். அப்போது போர்க்காலத்தில் பெண்ணினம் எந்தெந்த வகையில் பாதிக்கப்படுகிறதென்பதையும், குழந்தைகள் படும் அல்லல்களையும் எடுத்துக்கூறி, சமாதானத்தின் மூலமாகத்தான் பெண்களின் நல உரிமையையும், குழந்தைகளின் நல் வாழ்வையும் பேண முடியுமென்று வற்புறுத்தினர். அன்று பிற்பகல் லூயி விற்றன் என்ற அமெரிக்கப் பிரதிநிதி ஐந்து வல்லரசுகள் சமாதான உடன்படிக்கை பற்றி முக்கிய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார். அத்தகைய ஓர் உடன்படிக்கையின் மூலமாகத்தான் சமாதான ரீதியாகச் சகல பிரச்சினைகளையும் சமாளிக்கக் கூடிய ஒரு புது உலகத்தைக் காண முடியுமென்று கூறினர். மாநாட்டின் ஐந்தாம் நாளன்று, துருக்கி நாட்டின் புகழ் பெற்ற கவிஞர் நாஜிம் ஹிக்மத், உலக சமாதானக் கவுன்சில் செயலாளர் ஐவர் மாண்டேகு போன்ற பிரமுகர்களின் பேச்சைக் கேட்டோம். கொரிய யுத்தத்தைத் துருக்கி மக்கள் மிக வன்மையாகக் கண்டிப்பதைக் கவிஞர் எடுத்துக் காட்டி, சமாதானத்திற்காகவும், தேசிய விடுதலைக்காகவும் தங்கள் நல்லுயிர் ஈந்த தியாகிகளின் நினைவுக்காக ஒரு நிமிடம் மௌன மரியாதை செலுத்தும்படி சகலரையும் வேண்டினர்.

மகாநாட்டில் நிகழ்த்தப்பட்ட வன்மையும் கவர்ச்சியும் கொண்ட பேச்சுக்களில் ஒன்று மலேய சுதந்திரப் போர் பற்றி, மாண்டேகு அவர்களால் நிகழ்த்தப்பட்டதாகும். மலேயா மக்களுக்கு எதிராக வெள்ளை ஏகாதிபத்திய வாதிகள் மலேயாவிலே செய்யும் அநியாயம் ஒவ்வொன்றையும் தோலுரித்துக் காட்டினர். "பயிர்களை அழித்தல், கிராமச் சொத்துக்களைத் தரைமட்டமாக்குதல், கூட்டுத் தண்டனை முறை, கைதிகளைச் சித்திரவதைப் படுத்துதல், இறந்தோரின் பிணங்களைச் சீர்கெடுத்தல் ஆகியவை அனைத்தும் மலேயாவில் நிகழ்ந்து வருகின்றன என்பதை பிரகடனப் படுத்த இந்த மேடையை நான் பயன்படுத்திக் கொள்ளுகிறேன். இவை ஒவ்வொன்றும் மாபெரும் குற்றமாகும். இவை ஒரு நாட்டினரால் மற்றொரு நாட்டின்மீது கையாளப்படுவதாக இருந்தால், அது சர்வ தேசிய சட்டங்களுக்கு முரண்பட்டவை என முடிவு கட்டப்படும். இங்கு சாட்டப்படுகின்ற ஒவ்வொரு குற்றமும் ஆட்சியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. இவற்றைப் பற்றிப் பெருமையாக மார் தட்டிப் பேசுகிறார்கள் அவர்கள். எனவே இவை வெறும் குற்றச்சாட்டுகள் அல்ல என்பது தெளிவு. தளபதி டெம்பிளரும் (மலேயா ஹைகமிஷனர்), அவருடைய பிரதம கையாளான விட்டின்டன் என்பவரும் போர்க் குற்றவாளிகளென நான் இங்கு பிரகடனம் செய்கிறேன். நூரம்பெர்க் வழக்கு விசாரணையின் முடிவில், தூக்கு மேடை ஏற்றப்பட்ட ஜெர்மன் குற்றவாளிகளுக்கு இவர்கள் எந்த விதத்திலும் குறைந்தவர்களல்லர். பிரிட்டிஷ் குடிமக்களுடைய புனிதப் பொறுப்பு மலேய மக்களுடைய நீதியான கோரிக்கைகளை ஏற்று இந்த யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆவன செய்தலேயாகும் என்று நான் பிரகடனம் செய்கிறேன்," என்று அவர்

முழங்கினர். மலாய் நாட்டின் நிலவரத்தைபற்றிப் பேசி, மலேயாவிலேயே வாழுகின்ற இலங்கை மக்கள் அறிந்ததைவிட அதிகப்படியான உண்மைகளை அவர் எடுத்து விளக்கிய பொழுது, இலங்கையிலிருந்து சென்ற நான் அதனை மிகவும் அக்கரையாகக் கேட்டதற்குக் காரணம், பல்லாயிரக்கணக்கான இலங்கையரும், தமிழர்களும் இங்கு வசிப்பதேயாகும். பரிசு பெற்ற மொனிக்கா வெல்டன் என்பவர், கொரியாவில் தாம் இரண்டாம் தடவையாகப் பார்த்த பல விஷயங்களைப் பற்றித் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டார்.

சோவியத் குழுத்தலைவர் அனிசிமோவ் சோவியத் மக்கள், ஆசிய, பசிபிக் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களுடைய உரிமைகளையும், சுதந்திரத்தையும், சமாதானத்தையும் ஆதரிப்பதாக எடுத்துச் சொல்லி, சோவியத் மக்கள் சமாதானச் சூழ்நிலையில் புனருத்தாரணம் செய்யும் வகையையும், சமாதான இயக்கத்திற்கு ஆதரவு கொடுக்கும் முறையையும் வெகு தெளிவாக எடுத்துக் காட்டினர். சோவியத் நாட்டின் உஸ்பெக் குடியரசைச் சேர்ந்த கோட்ஜோவ் அந்தக் குடியரசினுடைய சாதனைகளை எடுத்து விளக்கினர். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நான்சி லாப்வூட் நான்கு பிள்ளைகளின் தாய்—கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்—அனைவருடைய அனுதாபத்தையும் பெறும் வகையில் பேசினர். சமாதானத் தூதர்கள் எட்டுச் செயற் குழுக்களில் தமக்கு விருப்பமான ஒன்றில் சேர்ந்து கொள்ள வேண்டிய நிலை இருந்தது. இலங்கைத் தூது கோஷ்டியினர் எத்தனைச் செயற் குழுக்களில் பங்கு பற்ற முடியுமோ, அத்தனையிலும் சேர்ந்து கொள்வதற்காகத் தங்களை முறையே பிரித்துக் கொண்டனர்.

மாநாட்டின் தலைமைப் பீடத்தின் முடிவின்படி, பொது அறிக்கைகள் சமர்ப்பித்தோர்கள் செயற் குழுத் தலைவர்களாகவும் துணை அறிக்கைகள் சமர்ப்பித்தோர் துணைத் தலைவர்களாகவும் ஏற்றுக் கொள்ளப்படவே, பொருளாதாரப் பிரச்சினைபற்றி ஒரு துணை அறிக்கை சமிர்ப்பித்த நான் பொருளாதாரக் கமிஷனின் உபதலைவன் ஆனேன்.

செயற் குழுக்கள் கடமையாற்றிய முறை

மாநாட்டின் ஆறும் நாளன்று பொருளாதாரச் செயற் குழுவில் 65 பிரதிநிதிகள் எல்லா நாடுகள் சார்பிலும் பங்கு கொண்டனர். அந்தப் பிரதிநிதிகள் மத்தியில் புகழ் பெற்ற பொருளாதார வல்லுநர்கள், பேராசிரியர் கள், தொழிற் சங்க, அரசியல் தலைவர்களும் காணப் பட்டனர். தலைமைப் பீடத்தின் மூலமாக மாநாட்டிற்கு இறுதியான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன் செயற்குழு பல தடவை கூடியது.

முதற் கூட்டத்தில் நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட்டது. பல பிரதிநிதிகள் சொற்பொழிவாற்றினுர்கள்.

செயற்குழுவின் தலைவரான சொரோ சோ தலைமை வகித்தார். கனடா தேசத்து பின்லே மெக்கன்சியும், நானும் முறையே இரண்டாவது மூன்ருவது நாட்களில் தலைமை தாங்கினேம். தலைவரோ அல்லது எங்களில் எவருமோ பொருளாதார நிபுணர்களல்லர். சீன தேசத்து மிகச் சிறந்த பொருளாதார நிபுணரும், சர்வதேச வியா பார வளர்ச்சி சங்கத்தின் சீனக்குழுத் தலைவரும், சீன பாங்கியின் துணை அதிபருமான டாக்டர் சீ சோ-டிங் செயற்குழுவின் செயலாளராகக் கடமையாற்றி வந்தார். செயற்குழு நடவடிக்கைகளில் அவரது அனுபவமும் அறி

வும் எமக்குப் பெரிதும் பயன் பட்டது. சில சந்தர்ப்பங்களில் இரவு நெடு நேரம் வரைக்கும் செயற்குழு கடமையாற்றி வந்திருக்கின்றது. நீண்ட நேர விவாதத்தின் பின்பு, பிரேரணைகள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டன. ஏனைய செயற்குழுக்களும் அதிக அக்கரையுடனும், நல்லெண்ணத்துடனும், ஒத்துழைக்க வேண்டுமென்ற நோக்கத்துடனும் கடமையாற்றி வந்தன. ஏழாவது நாள் இலங்கை தூதுக்குழுத் தலைவர் சுவாமி நாரவிலா, சமாதானத்திற்கும், வியாபாரத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு பற்றி எடுத்துக் கூறி, இலங்கையின் நல் வளர்ச்சிக்கு ஆசியாவில் சமாதானம் நிலவ வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். அடுத்துப் பேசிய பலருள்ளும், அமெரிக்காவைச் சேர்ந்த திருமதி அனிட்டா வில் காக்ஸ் என்பவர், இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் கொரியப் போரை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்று கோருவதை எடுத்துக் கூறினர்.

இந்திய, பாகிஸ்தான் கூட்டுப் பிரகடனம்

மாநாட்டின் எட்டாவது நாள் ஒரு பொன்னுன சம்பவம். தலைமை தாங்கிய கோ–மோ–ஜோ இந்திய பாகிஸ்தான் கூட்டுப் பிரகடனத்தை வெளியிட்டார். அமர்ந்திருந்த அத்தனை பேரும் எழுந்து நின்று மரியாதை காட்டி வரவேற்றனர். டாக்டர் கிச்சுலு இந்தியா சார்பிலும், பீர் மன்கி ஷரீவ் பாகிஸ்தான் சார்பிலும் முதன் முதலாகக் கையெழுத்திட்டு மேடை மேல் ஏறும் போது அளவு கடந்த வரவேற்புக் கிடைத்தது. அவர்களில் தொடர்ந்து பேராசிரியர் கியான்சந்த், ரவிசங்கர் வியாஸ், ரோமேஷ் சந்திரா ஆகியோர் இந்தியாவின் சார்பிலும், சௌகத்கயத்கான் அப்துர் ரகுமான், மீர் அப்துல் கயூம் ஆகியோர் பாகிஸ்தான்

சார்பிலும் கையெழுத்திட்டனர். இந்தியா பாகிஸ்தான் சமாதானத் தூதுக்குழுத் தலைவர்கள் ஒருவரை ஒருவர் கட்டியணைத்து ஆலிங்கனம் செய்த காட்சி கூடி இருந்த அத்தனை பேருள்ளத்திலும் ஆனந்த மடையைத் திறந்தது.

சரீபிற்கு, கிச்சுலு அவர்கள் ஓர் அழகான காஷ்மீர் பெட்டி ஒன்றையும், உயர்ந்த பட்டில் செய்யப்பட்ட "பீக்கிங் கோடை மாளிகை" படத்தைத் தாங்கிய ஒரு பட்டுத்துணியையும் அன்பளிப்பாகவும், பீக்கிங்கில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியின் ஞாபக மாகவும் கொடுத்தார். பஞ்சாப் வழக்கப்படி சகோதரத் துவ சின்னமாக விளங்கத் தகுந்த பொன்னிறத் தொப்பி ஒன்றையும், பீக்கிங் ஞாபகார்த்தமாக ஓர் அழகிய மரப் பெட்டியையும் பாகிஸ்தான் பிரதிநிதி வழங்கினர். சகோதரத்துவ அன்பின் அறிகுறியாக மலர் மாலைகளை மாற்றிக் கொண்டனர்.

உருது, சீன, ஆங்கில மொழிகளில் 'சமாதானம் நீடூழி வாழ்க' என்று எழுதப்பட்ட ஒரு பதாகையையும், மலர் மாலைகளையும் கோ-மோ-ஜோ அவர்களுக்குத் தரப்பட்ட வுடன் பலத்த கையொலி நீடித்தது. செயற் குழுத்தலைவர் என்ற முறையில் நான் இந்தக் கூட்டுப் பிரகடனத்தை பெரிதும் ஆதரிக்கிறேன். "நல்லுறவும் நட்பு மனப்பான் மையும் இந்தப் பிரகடனத்தில் பிரதிபலிக்கிறது. நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதிருக்கின்ற காஷ்மீர் பிரச்சினை போன்ற ஏனைய பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கத்தகுந்த நல்லாதாரங்களைக் கொண்டிருக்கின்றது இந்தக் கூட்டு அறிக்கை. ஆகையினால், இது நமது மாநாட்டின் குறிப் பிடத்தகுந்த அம்சம்" என்று கூறினர். இந்தப் பிரகட னத்தில் கையெழுத்திடும்போது கையொலி 10 நிமிடங் களுக்கு மேலாக நீடித்தது.

ஜபபானியரான கனி மொன் நற்காமுரு ஒன்பதாம் நாள் மாநாட்டில் தலைமை தாங்கி நிகழ்த்திய சொற்பொழிவின்போது, உண்மையான கலைப்பண்பாட்டின் பல அம்சங்களை, அமெரிக்க ஆக்கிரமிப்புக்காரர்களின் தூண்டுதலின்பேரில் ஜப்பான் அரசியலார் தாக்க முனைவதை வன்மையாகக் கண்டித்தார். ஜப்பானியத் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், அறிவாளிகள் அத்தனைபேரும் ஒன்ருகத் திரண்டு ஜப்பான் நாட்டின் தேசிய விடுதலை, கலாச்சார, சமாதான நல்வாழ்விற்காக இடைவிடாது போராடிவரும் வகையைக் கூறியபோது பிரதிநிதிகள் அத்துணைபேரும் ஆர்ப்பரித்தனர்.

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும், இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினருமாகிய பண்டிட் சதுர் நரேயிங் மாளவியா, கொரியா, வியட்நாம், மலாயா போன்ற இடங்களில் ஆக்கிரமிப்புப் போர் வெறியர்கள் காட்டுமிராண்டித்தனமான நரவேட்டையிலும், மனித குலத்தை அவமதிக்கும் அநாகரீக, அக்கிரமங்களிலும் ஈடுபட்டுள்ளதை வன்மையாகக் கண்டித்தார்.

சீன மக்கள் குடியரசுக்கு வாழ்த்துக் கூறிவிட்டு, யுத்தத்திற்கும் ஏகாபத்தியத்திற்கும் உள்ள தொடர்பை எடுத்துக் கூறி, ஐக்கிய முன்னணி முறையைப் பரந்த அளவில் பயன்படுத்த வேண்டும் என்று இலங்கையின் சார்பாகப் பேசிய எட்மன் சமரக்கொடி கூறினர். பத்தாம் நாளில், முதலில் பேசிய திருமதி மஞ்சுரி சட்டோபாத்யாய "போர் நடவடிக்கைகளாலும், பொருளாதார அழிவுகளாலும் நேர்ந்த நெருக்கடிக்கு இந்தியப் பெண்ணினமும், பிள்ளைகளும் பலியாகியுள்ளனர். இந்தத் தொல்லைகளை இனி நாம் பொறுக்க மாட்டோம். அவற்றை எதிர்த்துப் போராட—சமாதானத்தைக்காக்க

முன் வந்துவிட்டோம்" என்று இந்திய மாதரினத்தின் சார்பாக முழங்கினர்.

சீன நாட்டில் வெகுநாட்களாக இருந்து அனுபவப் பட்டவரும், நியூசிலாந்து துணைத்தலைவருமான ரிவீ அலே, பழைய சீனத்தின் தன்மையையும், அதை எதிர்த்து, ஒடுக்கப்பட்ட மனித குலத்தின் ஒரே நம்பிக்கைச் சுடராக விளங்குகின்ற நவசீனத்தினுடைய புனருத்தாரணத்தை யும் எடுத்துக்கூறி விளக்கினர். கிருமிகள் பற்றிய வல்லுநர் டாக்டர் சென்வென்-குயி; கொரியாவிலும், வடகிழக்குச் சீனத்திலும் அமெரிக்க விமானங்கள் தொடுத்து வருகின்ற கிருமிப்போர் பற்றித் தான் கண்ட உண்மைகளை எடுத்துக் கூறினர்.

பண்டார நாயக்கா அவர்கள், இலங்கையில் அமெரிக்க வெளி விவகார அலுவலகத்தினர் செய்து வருகின்ற கொடுமைகளையும் அம்பலப்படுத்தி, ஏகாதிபத்தியத் திற்கு எதிராக நடத்தப்படுகின்ற விடுதலைப்போர் உண்மையாகவே சமாதானத்திற்கு நடத்தப்படும் அறப் போர் என்று வற்புறுத்தினர்.

இருநூறுக்கு மேற்பட்ட ஆங்கிலோ-அமெரிக்கப் போர்க் கைதிகள் அனுப்பிய கடிதத்தில், கொரியப் போரை உடனடியாக நிறுத்தினல் தான் தாம் வீடு போய்ச்சேர முடியும் என்று குறிப்பிட்டிருந்ததை மாநாட் டினர் வரவேற்றனர். மாநாட்டில் 37 நாடுகள் சார்பாக 351 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்று, மாநாட்டின் முடிவு நாளாகிய அக்டோபர் 12-ம் நாள் மாநாட்டின் பொதுச் செயலாளர் அறிவித்தார்.

மாநாட்டின் முன்பு இப்பிரகடனங்களையும், தீர் மானங்களையும் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக, இவை தலைமைப்பீடத்தவரால் விரிவாக ஆராயப்பட்டது என்

றும், முடிவில் தீர்மானிக்கப்பட்டவைகளே, செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதென்றும் மாநாட்டுத் தலைவர் பெங் சென் அறிவித்தார். மேலும் அவர், விரிவான உயர்ந்த கருத்துக்களே இவை பிரதிபலிக்கின்றது என்ருலும் கூட, மாநாட்டினர் மேலும் விவாதித்து, இறுதி முடிவுக்கு வரலாம் என்று கூறினர்.

ஏகமனதாக ஏற்றனர்

பல தீர்மானங்கள் மாநாட்டின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டன. உலக மக்களுக்கோர் வேண்டுகோள்; ஆசிய பசிபிக் சமாதான மாநாடு ஐ. நா. சபைக்கு விடுத்த அறிக்கை; ஜப்பான், கொரியா, தேசீய விடுதலை; பொருளாதாரத் தொடர்பு; கலாச்சார உறவு; பெண்கள் நலவுரிமை; குழந்தைகள் நலம்; ஐந்து வல்லரசுகள் சமாதான ஒப்பந்தத்திற்காக முயற்சிகளைக் கூட்டுதல்; மக்கள் சமாதான மாநாட்டிற்கு ஆதரவு; வெளி விவகாரக் குழுக்களே ஆசிய, பசிபிக் பிரதேசங்களில் ஸ்தாபித்தல் ஆகிய தீர்மானங்கள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்படும் போது, எல்லோரும் எழுந்து நின்று கை தட்டி வரவேற்றனர். ஒவ்வொரு தீர்மானமாக, பகுதி பகுதியாக விவாதம் நடைபெற்று கைகாட்டுவதன் மூலமாக வாக்கெடுப்பு நிகழ்ந்தது. தீர்மானங்களின் சொற்களைச் சீர்படுத்தவோ, கருத்துக்களை உயர்த்தவோ கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு திருத்தப் பிரேரணைக்கும் உற்சாகமான வரவேற்புக் கிடைத்தது. தேசீய விடுதலை பற்றிக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆஸ்ரேலிய பிரதிநிதி கனன் மெயினர்டு சில கருத்து வேற்றுமை காரணமாக மறுத்தார். தலைவர் பென் செங்கினுடைய அறிவுரையின் பேரில் ஒரு சிறு கூட்டாலோசனை நிகழ்ந்தது. துணைச் செயலாளர் ரோமேஷ் சந்திராவும், கனன் மெயினர்டும் கருத்தொருமித்த முறையில்

கொண்டு வந்த திருத்தப் பிரேரணையை ஏகமனதாக ஏற்றனர். எதிர்ப்பும் மறுப்பும் அற்ற முறையில் தீர்மானங்கள் பதினொன்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று தலைவர் அறிவித்தவுடன், மண்டபம் முழுதும் ஆரவார ஒலியும், எதிரொலியும் கேட்டது. ஆசிய, பசிபிக் பிரதேச சமாதானக்குழு உறுப்பினர்களாய்ப் பின் வருவோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநாட்டுத் தலைமைக் குழுவில் அங்கம் வகித்தோரில் கிருஸ்தவ பாதிரி ஜேம்ஸ் எண்டி கொட் (கனடா), பாப்லோ நெரூடா (சில்லி), பாக்டென் ஆய் (கொரியா), போல் ரூேப்சன் (அமெரிக்கா) முதலானவர்கள் இடம் பெற்றிருந்தனர். அத்துடன் ஆப்கனிஸ்தான், நேப்பாளம், காஷ்மீர் ஆகிய மூன்று நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் இடங்கள் ஒதுக்கப் பட்டிருந்தன. தலைவர் சூங் சிங் லிங் (சீனு), துணைத் தலைவர்கள் ஐ. அனிசிமோவ் (ருஷ்யா), சுவாமி ஜேம்ஸ் எண்டி கொட் (கனடா), நாஜிம் ஹிக்மத் (துருக்கி), சுவாமி விக்டர் ஜேம்ஸ் (ஆஸ்திரேலியா), டாக்டர் கிச்சுலு (இந்தியா), கோ-மோ-ஜோ (சீனு), மட்சு மோதோ யீசிரோ (ஜப்பான்), பாக்டன்-ஆய் (கொரியா), போல் ரூேப்சன் (அமெரிக்கா), பீர் மான்கி ஷரீபும், (பாகிஸ்தான்) தலைமைச் செயலாளராகவும், துணைச் செயலாளர்களுமாக மாநாட்டில் கடமையாற்றியோர் களே தலைமைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனை பேருடைய பெயர் பட்டியலும் வாசிக்கப்பட்டு வரவேற்கப்பட்டது. தலைமைப் பீடத்தைச் சேர்ந்த டாக்டர் கிச்சுலு, உலக சமாதான இயக்கத்தின் வளர்ச்சிக்கு மாநாடு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று சுட்டிக்காட்டினர். வீடு திரும்பியவுடன் ஒவ்வொருவரும் சமாதான இயக்கத்தை வளர்ப்பதற்கும், இடைவிடாமல் தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டு

வரவும் முயற்சி எடுக்க வேண்டுமென்று பிரதிநிதிகளை வேண்டிக்கொண்டார். பேச்சின் முடிவில், பலத்த ஆரவாரத்தின் மத்தியில் அனைவரும் எழுந்து நின்று தலைவருக்கு மரியாதை செலுத்தினர். வாத்திய ஒலி முழங்க, 'சமாதானத்தைப் பாதுகாத்து' என்ற அழகான கீதம் பாட, மண்டபத்தின் பல பாகங்களிலுமிருந்து பல நிறப் பூச்செண்டுகளுடன் பச்சிளம் பாலர்கள் மாநாட்டின் மத்தியில் புகுந்தனர். இந்த இன்பக் காட்சிதான் மாநாட்டின் சிகரமாயமைந்தது. பிரமித்து நின்ற பிரதிநிதிகள் எழுந்தனர். ஆர்ப்பரித்துக் குழந்தைகளை அணைத்தனர். இத்தகைய மட்டற்ற மகிழ்ச்சியின் மத்தியில் ஆசிய, பசிபிக் சமாதான மாநாடு இனிதாக முடிவடைந்தது. பன்மொழிகளிலும் ஆர்ப்பாட்டங்கள், ஆரவாரங்கள், 'சமாதானம் நீடூழி வாழ்க' என்ற ஒலி, மாநாடு முடிவடைந்து விட்டது என்று தலைவர் கூறிய பின்பும், நெடுநேரத்துக்கு நின்று நிலவியது. வியட் நாம், மலேயா, கொரியப் பிரதிநிதிகளுக்கு, உலகத்தின் ஒப்பரிய பிரதிநிதிகள் அத்தனை பேரும் மலர் மாலை அணிந்து, கொடிகள் பதாதைகள் முதலியன வழங்கி கட்டித் தழுவி வரவேற்ற கண் கொள்ளாக் காட்சி என்றென்றும் மறக்க முடியாது. ஒவ்வொரு நாளும் சீன மக்களுடைய மத, இளைஞர், பெண்கள் கழகங்கள் சார்பில் மலர் செண்டுகளைத் தலைமைக்குழுவினருக்குச் சமர்பித்ததும் குறிப்பிட வேண்டியதாகும்.

ஆறும் அத்தியாயம்

பீக்கிங்கில் பிற வேலைகள்

அக்டோபர் 13-ம் நாள் பழைய சக்கரவர்த்திய அரண்மனை முன்பு தைகோதீன் என்ற இடத்தில், மாநாட்டின் முடிவு விழாவை 50,000 மேற்பட்ட மக்கள் கூடிக்கொண்டாடினர். சமாதானக் குழுவினர் கூட்டத்தை வந்தடைந்த வழி நெடுக ஆயிரக்கணக்கான இளம் ஆண், பெண்கள் அணிவகுத்து நின்று ஆர்ப்பரித்தனர். வெண் தொப்பி அணிந்த யுவர்கள் அணிவகுப்பு, சீனமொழியில் சமாதானம் என்ற சொல்லை உச்சரித்த வண்ணம் காட்சி அளித்தது. பீக்கிங் சமாதானக் குழுவினரும், இன்னும் பிற குழுவினரும் கூட்டத்தில் பேசினர். கூட்ட முடிவில் இலங்கை உள்பட அநேக தூதுக் குழுவினர் சீனத்துக்கு நல்லெண்ணம் தெரிவிக்கும் முகமாகப் பல நன்கொடைகள் வழங்கினர். அன்று மாலை பீக்கிங் மேயர் பெங் சென் கொடுத்த வரவேற்பு விழாவில், எல்லாத் தூதுக்குழுவினரும் கலந்து கொண்டனர். அதன் முடிவில் ஓர் நடனம் நடந்தது.

கூட்டாலோசனை

செப்டம்பர் 14-ம் திகதி தொடங்கி சில நாட்களுக்கு தூதுக் குழுவினர் பல கூட்டாலோசனை சபைகளிலும், மாநாடுகளிலும் கலந்து கொண்டனர். நவசீனத்தின் புதிய ஆட்சி கைக்கொள்ளும் வேலைதிட்டங்கள் பற்றிக் கலந்தாலோசித்தோம். தொழிற் சங்கம், கல்வி, பெண்கள் நிலை, சட்ட அமைப்பு, பத்திரிகைகள், நிலச்சீர் திருத்தம் ஆகியவைகளில் நவசீனத்தின் புத்தாட்சி மேற்கொள்ளும் வழி முறைகளைப்பற்றி விவாதித்தோம். எல்லாக்

குழுவினரும் எல்லாப் பொருள் பற்றியும் தெரிந்து கொள்ளக் காலம் போதாமையினுல் அவரவர் விரும்பிய ஆலோசனைக் குழுக்களில் சேர்ந்து கொண்டனர். நான் தொழிற்சங்கம், கல்வி, பத்திரிகைத் தொழில், பொருளாதாரம், வியாபரம் பற்றிய பிரச்சினைகளில் ஈடுபட்டேன். ஒவ்வொரு துறையிலும் சீன வல்லுநர்கள் சொற்பொழிவாற்றிய பின், ஐயங்களைத் தீர்த்து வைக்கும் முறையில் பல கேள்விகள் எழுப்பப்பட்டு, அதைத் தொடர்ந்து விவாதமும் நிகழ்ந்தது. அது போழ்து நவசீனத்தைப் பற்றியும், அதன் நேச நாடுகளைப் பற்றியும் செய்யப்பட்டு வரும் துர்ப்பிரசாரங்களுக்குத் தகுந்த பதிலளிக்கப்பட்டது.

சீன கல்வி, தொழிற் சங்க சார்பில் அதன் தலைவர் பேசிய முதல் வாக்கியம் "காற்றும் சூரிய ஒளியும் நமக்கு எவ்வளவு தூரம் தேவையோ அவ்வளவு தூரம் அவசியமானது சமாதானம்" என்பது இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த விவாதங்கள் எல்லாம் சீன மக்கள் சமாதான விரும்பிகள் என்பதையும், அதைப் பாதுகாக்க அவர்கள் எல்லாவகையான நடவடிக்கைகளும் எடுத்து வருகிறுர்கள் என்பதும் எவ்வித சந்தேகத்திற்கும் இடம் இல்லாது என் இதயத்திலே பதிந்தது.

பீக்கிங்கில் தங்கி இருந்த காலத்தில் பல சீனத் திரைப் படங்களையும், கதம்பக் கச்சேரிகளையும், நாடக நிலையங்களையும் பார்வையிட நேர்ந்தது. நான் பார்த்த ஓர் நாடகம் "வெண் நங்கை" (White Haired Girl) என்பது.

மாநாடு முடிவடைந்த சில தினங்களுள் பல்வேறு நாட்டினரும் நடிகர்களாக இல்லாத போதிலும்—பாட்டுக்கள் பாடி, நடனங்கள், நாடகங்கள் முதலியவற்றை திறம்பட நடித்துக் காட்டினர். இலங்கை சார்பாக

பீக்கிங் மாநாட்டில் ஆசிரியர் சொற்பொழிவாற்றுகிறார்.

தீர்மானங்களின் மீது வாக்கெடுப்பு நடந்தபோது எடுத்த படம்,

பண்டார நாயக்கா, ரத்தினவீரா, திருமதி வைகுந்த வாசன் ஆகியோர் பாட்டுக்கள் பாடி, நடனங்கள் நடத்திக் காட்டினர்.

கோ-மோ-ஜோ விருந்து

சீனமக்கள் குடிஅரசின் துணை முதலமைச்சர், இலங்கை தூதுக் குழுவினருக்கும்—சீனமக்களாட்சிக்குமிடையில் வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை ஒட்டி, அதைக் கொண்டாடும் நோக்கத்துடன் ஒரு விருந்துபசாரம் வைத்து அதற்கு எங்களையும் அழைத்திருந்தது எங்களை மிகவும் கௌரவப்படுத்தியது. திருமதி-கோ-மோ-ஜோ, கோ-மோ-ஜோ, சீன வெளிநாட்டு வியாபார வளர்ச்சிக் கழக பொதுச் செயலாளர் சி-சோ-திங், அரசியல் சட்டக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சாங் டி சுவாங் ஆகிய இன்னும் பலரும், எங்கள் தூதுக் குழுவைச் சேர்ந்த பதின்மரும் கலந்து கொண்டோம். இலங்கை-சீன நல்லுறவுக்கு வாழ்த்துத் தெரிவித்த கோ-மோ-ஜோ, "மக்கட் தொகை சிறிதாக இருந்தாலும், பெரிதாக இருந்தாலும் பேதம் பாராட்டாது, எந்த நாட்டையும் மிகுந்த மதிப்புக்காட்டி நடத்த சீனநாடு தயாராக இருக்கின்றது. சீன—இலங்கை வியாபார ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில், சீன நாடு இடையூறுகளை உண்டாக்கவோ அல்லது விலைவாசிப் போட்டியிலேயோ ஈடுபடவில்லை. தங்களுடைய கொள்கை எல்லா மக்களுக்கும் முடிந்தவரையில் உதவி செய்வது தான். இலங்கைக்கு அரிசிவேண்டும். அது சீனுவிடம் கிடைக்கிறது. அக்காரணத்தினுல் இலங்கைக்கு அரிசியை அனுப்ப சீனு தயாராக இருக்கிறது. சீனத்திற்கு ரப்பர் வேண்டும். அது இலங்கையிடம் கிடைக்கிறது. சீனு அதை விலை கொடுத்து வாங்கத் தயார்" என்ருர். முடிவுரையில், "இருநாடுகளுக்கிடையேயும் ஏற்பட்ட இந்த ஒப்பந்தம் ஓர் புதிய சகாப்

தத்தைத் தொடங்கி வைத்திருக்கிறது என்று கூறினர். இலங்கை சார்பாக சுவாமி நாரவில்லா பதிலளித்தார். எட்மன் சமரக்கொடி அவர்கள் தன்னுடைய பேச்சில், "பீக்கிங் மிகவும் குளிரான பட்டினமென்று கேள்விப் பட்டதாகவும், அக்குளிரொன்றும் பீக்கிங்கில் தன்னைத் தாக்காமல் விட்டதற்குக் காரணம் தாம் எங்கு போனாலும் தமக்குக் கிடைத்த உற்சாகமான வரவேற்புதான்" என்றூர்.

மாநாடும், விவாதங்களும் முடிவடைந்தபின், பீக்கிங்கிலும் சீனத்திலும் உள்ள வேவ்வேறு பகுதிகளையும், பொருள்களையும் பார்க்கப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர். சிலர் தம் நாடு போய்ச் சேர்ந்தனர். பலர் சீனத்தின் பல பாகங்களையும் பார்வையிடுவதற்காக வாரக்கணக்கிலும், மாதக்கணக்கிலும் தங்கியிருந்து பல பட்டினங்களையும், நவசீன வாழ்க்கையின் பல அம்சங்களையும் கவனித்தனர். இலங்கையைச் சேர்ந்த பத்து உறுப்பினர்களில் நால்வர் சில நாட்கள் அங்கு கழித்துவிட்டுத் தாய்நாடு திரும்பினர். சண்முகதாசன், ரத்தினவீரா முதலியோரும் நவசீனத்தில் பின்னும் இரண்டு வாரம் தங்கிவிட்டு, நவம்பர் 7-ம் நாள் மாஸ்கோ கொண்டாட்டத்தில் பங்கு கொள்ள சோவியத் யூனியன் நோக்கிப் புறப்படவேண்டி இருந்தது. ஆகையினல், சீனக் கிராமமொன்றையும், பீக்கிங் பல்கலைக்கழகம், டைன்ஸ்டின், ஷாங்காய் போன்ற சில பட்டினங்களையும் பார்வையிடத் திட்டமிட்டோம்.

சீனக் கிராமம்

அக்டோபர் 16-ம் நாள் பீக்கிங்கில் இருந்து 20 மைல் தூரத்திலுள்ள பா-தா-சன் என்ற எண் கோணக் கிராமம் போய்ச் சேர்ந்தோம். கிராமிய மக்கள் எங்களை வர

வேற்றனர். அங்குள்ள கிராம நிர்வாக அலுவலகத்தில், அதன் தலைவர் வியாங்கூம் அவர்களைச் சந்தித்தோம். அவர் பின்வருமாறு கூறினர்: "449 குடும்பங்களில் 2098 ஆட்கள் வாழ்கின்றனர். அக்கிராமத்துக்கு 7292 மோ (1 மோ=$\frac{1}{3}$ ஏக்கர்) நிலம் சொந்தம். எம் நாடு விடுதலை பெறும் முன்பு 22 நிலப்பிரபுக்கள் 1619 மோ நிலத்தை ஆண்டு வந்தனர். சராசரியாக நிலச்சுவான்தார் குடும்பங்களில் உள்ள ஒரு ஆளுக்கு 13 மோ நிலம் சொந்தம். ஏனையோர்களுக்கு சராசரி 1/5 மோ நிலமே இருந்தது. 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வேலை செய்த உழவனுக்குக் கூட, உண்ணவோ உடுக்கவோ போதியளவு வசதி கிடைக்கவில்லை. நிலப் பிரபுக்களுக்குப் பெருந் தொகையான வரி கொடுக்க வேண்டி இருந்தது. நானும் நிலச்சுவான்தாருக்கு இடைவிடாது உழைத்து வந்தேன். என்னுடைய இரண்டு குழந்தைகள் நோய்வாய்ப்பட்டுப் பணமின்மையினுல் இறந்தனர். கோமின்டாங் ஊழியர்களுடன் சேர்ந்து நிலப்பிரபுக்கள் கொடிய செயல்களில் ஈடுபட்டனர். எங்களிடமிருந்த பொருள்களைப் பிடுங்கிக் கொண்டு பெண்களைக் கற்பழித்தனர். முன்பு நாங்கள் பட்ட துன்பம் சொல்லி முடியாது. 1948-ம் ஆண்டு டிசம்பர் மாதம் தலைவர் 'மாஓ' எமது அடிமைத் தளைகளை அறுத்தார். நிலமற்ற 223 விவசாய குடும்பங்கள், குடும்பத்திலுள்ள ஒருவருக்கு 3 மோ நிலம் வீதம் பெற்றுக் கொண்டனர். முன்னைய 22 நிலப்பிரபுக்கள் குடும்பங்களுக்குமாக 231 மோ நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. இன்று அரசாங்கம் எங்களுக்குப் பல விதத்தில் துணை புரிகிறது. 1937 மோ தரிசு நிலம், பொன் போன்ற நெல் விளையும் நிலமாக மாற்றப்பட்டு விட்டது. முன்னுளில் 1 மோ நிலத்தில் ஒரு பிக்கில் (அளவு) தானியம் விளைந்தது. இப்பொழுது $2\frac{1}{2}$ பிக்கில் நெல் கிடைக்கிறது. ஏனைய துறைகளிலும் முன்னேற்றம் உண்டு.

முன்னுளில் 130 மாணவர்கள் கிராமப்பள்ளியில் படித்தார்கள். அவற்றுள் 100 பிள்ளேகள் நிலப்பிரபுக்கள் குடும்பத்தையும், ஏனைய பணக்கார விவசாயிகள் குடும்பத்தையும் சேர்ந்தவை. ஏழை விவசாயிகள் பிள்ளேகள் 30 தான். இன்றே 294 மாணவர்கள். முன்னுளேய ஏழைக் குடும்பங்களில் இருந்து படிப்போர் எண்ணிக்கை பெருந்தொகை. முதியோர் கல்விக்காக பல வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. படிப்பின்மையை 2, 3 ஆண்டுகளுக்குள் போக்கத் தீர்மானித்து விட்டோம். எங்கள் பண்ணேகளில் 31 கூட்டுறவுக் கழகங்கள் இருக்கின்றன. அவற்றுள் 2 விவசாய உற்பத்திக் கூட்டுறவுக் கழகங்கள்'' என்று விளக்கினுர்.

கிராம நிர்வாக அலுவலகத்திலிருந்து ஒரு நடுத்தர விவசாயியின் குடும்பத்தைப் பார்வையிடச் சென்றிருந்தோம். 'லி' என்பது அவர்களுடைய குடும்பப் பெயர். அந்த வீட்டுத் தாய் தங்கள் மகிழ்ச்சி வாழ்வுக்குக் காரணம் தலேவர் 'மாஓ'வும், மக்கள் விடுதலேப் படையும் தான் என்று பெருமிதத்தோடு கூறினுள். தமக்கு விமோசனம் தந்த மக்களாட்சிக்கு தாய்மையின் வணக்கத்தைத் தெரிவித்தாள். விடுதலேக்கு முன்னதாக தாம் பட்ட அல்லல்களேக் கண்ணீர் சிந்த எடுத்துக் கூறினுள்.

ஒரு நிலப் பிரபுவின் வீட்டுக்குப் போக வேண்டும் என்று நாம் கேட்க, கிராமத் தலேவர் நம்மை மியூ குவாண்-டா என்ற நிலப் பிரபுவின் வீட்டுக்கு அழைத்துச் சென்றுர். ஏனைய வீடுகளே விட மிகவும் பெரியதாகக் காணப்பட்டது, இந்த வீடு. நிலச்சீர் திருத்தம் செய்யப் பட்ட போதிலும், நிலப்பிரபுக்கள் வாழ்ந்த வீட்டு உரிமையை அது பாதிக்கவில்லே என்றறிந்தோம். முன்னேய வீடுகளிலேயே அவர்கள் வாழ்ந்தார்கள். நெடுநேரமாய்

அவருடன் பேசிக் கொண்டிருந்தோம். சில கேள்விகளைப் போடும் போதெல்லாம் அவர் சிறிது வெட்கப்பட்டார். நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி அவர் அபிப்பிராயம் என்ன என வினவினோம். "தான் அதை முதலில் எதிர்த்ததாகவும், பின்பு நிலச் சீர்திருத்தத்தின் நீதியான தன்மையையும், ஏற்றுக்கொள்ளத் தக்க முறைகளையும் நன்கு உணர்ந்ததற்குப் பின் ஆட்சியாளருடன் ஒத்துழைத்து, கிராமத்தை முன்னேற்றும் முயற்சிகளை எடுத்துக் கொள்வதாயும், ஆட்சியாளருடன் எல்லாத் துறைகளிலும் ஒத்துழைப்பதாயும்" கூறினர். மேலும், "சீனப் புரட்சிக்கு முன்பு 103 மோ நிலம் சொந்தமாக இருந்த அவருக்கு, நிலச் சீர்திருத்தத்தின் பின் 8 மோ கிடைத்த பொழுதிலும் தான் இன்பமான வாழ்க்கை நடத்தி வருவதாகவும், தானே வயலில் வேலை செய்து மகிழ்ச்சியுடன் வாழ்வதாகவும்" கூறினர்.

கிராமப் பள்ளி

நாங்கள் பார்வையிடச் சென்றிருந்த பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர் ஹூடென்-சூ, புரட்சிக்கு முன்பு நிலப்பிரபுக்கள் பிள்ளைகள் படித்த பள்ளியில் இன்று பெருவாரியான விவசாயிகளின் பிள்ளைகள் படித்து வருவதாகக் குறிப்பிட்டார். அப்பள்ளிக்கூடம், 293 மாணவர்கள், 9 ஆசிரியர்கள், 27 அறைகளைக் கொண்டு விளங்குகிறது. (1) நாட்டுப் பற்று, (2) தொழிலுக்கு வணக்கம், (3) விஞ்ஞானப் பற்று, (4) பொது மக்கள் உடமைகளைப் பேணுதல், (5) மக்கள் மீது அன்பு காட்டுதல் என்ற அடிப்படையில் அப்பள்ளிக்கூடக் கல்வித் திட்டம் இருந்தது. அன்று மாலை எட்மனும், கெக்டரும் இலங்கைக்குப் புறப்பட்டனர்.

கிருமிப் போர்

அக்டோபர் 17-ம் நாள் பீக்கிங்கில் நடந்த கிருமிப் போர் முறைக் காட்சிச் சாலைகளை 3 மணி நேரத்துக்கு மேல் பார்வையிட்டோம். கொரியாவிலும், வட, கிழக்குச் சீனத்திலும் போடப்பட்ட கிருமிக் குண்டுகளைத் தாங்கள் உபயோகப்படுத்தியதாகவும், அக் கொடிய பாபச் செயல்களை ஒப்புக்கொள்வதாகவும், பிடிபட்ட அமெரிக்க அதிகாரிகள் செய்த சொற்பொழிவுகளை ஒலிப்பதிவுகள் மூலம் கேட்டோம். பிடிபட்ட அமெரிக்கர்களிடமிருந்து கிருமிப் போர் முறைக் குறிப்புக்கள் கொண்ட பல கையெழுத்துப் பிரதிகளைக் கண்டதின் பின் எவ்வகையான ஐயமுமின்றி கொரியப் போரில், அமெரிக்கர் கிருமிப் போர் முறையைக் கையாண்டனர் என்பது தெளிவாகின்றது. இதில், காட்சிச் சாலைக்கு வந்த ஆயிரக்கணக்கான மக்களில் ஒருவர்கூட மாறுபட்ட அபிப்ராயம் உடையோராக இருக்கவில்லை. கொரியாவில் கிருமிப் போர் முறை பற்றி சர்வதேச விஞ்ஞானக் குழுவினர் நடத்திய ஆராய்ச்சி பற்றிய திரைப்பட மொன்றை நாங்கள் கண்டோம். குழுவில் கடமை ஆற்றிய உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞானிகள் விபரம் பின்வருமாறு: டாக்டர் அன்ரியா அன்ரீன் (சுவீடன்), ஜீன் மால்டெரி (பிரான்ஸ்), டாக்டர் ஜோசப் நீட்காம் (பிரிட்டன்), டாக்டர் ஒலிவீரோ ஒலிவோ (இத்தாலி), டாக்டர் சாமுவேல் பி. பெஸ்சோ (பிரேசில்), டாக்டர் என். என். சுகோவ் வெர்சினிகோவ் (ருஷ்யா). இக்குழுவினர் பின்கண்ட முடிவைத் தெரிவித்திருக்கின்றனர்.

"நேர்மையாகவும், விஞ்ஞான முறைப்படியும் செய்த ஆராய்ச்சிக்குப்பின், கொரிய, சீன மக்கள் கிருமிப் போர் முறைக்கு இலக்காய் இருந்திருக்கின்றனர்.

என்று தெரியவந்தது. இந்தக் கிருமிப் போர் ஆயுதங்களை அமெரிக்கர் உபயோகப்படுத்தியிருக்கின்றனர். அமெரிக்கப் படையினர் கையாண்ட முறைகள் இரண்டாவது உலக யுத்தத்தின்போது, ஜப்பானியப் படையினர் கையாண்ட முறையின் வளர்ச்சியாகவே காணப்பட்டது. நாங்கள் தர்க்கரீதியான பரிசீலனைக்குப் பிறகு, இந்த முடிவுக்கு வந்தோம். உலக மக்கள் அத்தனை பேரும் ஏகோபித்துக் கண்டிக்கும் இந்தக் காட்டுமிராண்டிச் செயலை நடத்திக் காட்டியிருக்க முடியுமா என்று ஐயப்பட்ட போதிலுங்கூட, நாங்கள் செய்த ஆராய்ச்சியின் விளைவாக, இது உண்மைதான் என்று தீர்மானிக்கும் துரதிர்ஷ்டமான முடிவுக்கு நாங்கள் வர நேர்ந்தது குறித்து மிகவும் வருந்துகிறோம்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைக் கொண்டு மனித குலத்தை நிர்மூலமாக்குவதிலிருந்து தடுக்கவும், உலகத்தைப் போரிலிருந்து காப்பாற்றவும் எல்லா மக்களும் இரட்டிப்பு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பீக்கிங் பல்கலைக் கழகம்

1898-ம் ஆண்டு நிறுவப்பட்ட பீக்கிங் பல்கலைக் கழகத்தைப் பார்வையிட அக்டோபர் 19-ம் நாள் சென்றோம். 1918—1919-ம் ஆண்டுகளில் இதே பல்கலைக் கழகத்தில் தலைவர் மாசே-துங் நூலகத்தர் ஆகப் பணிபுரிந்தார். அச்சமயம் ஒரு மாதத்திற்கு 8 வெள்ளி டாலர்களைச் சம்பளமாகப் பெற்று வந்தார். இதே பல்கலைக் கழக நூலகத்தில் முதன்முதலில் 'மார்க்ஸிசம்' பற்றி 'மாஓ' அறியத் தொடங்கினார். பேராசிரியர் லீடா-சௌதான் சீனத்திற்கு மார்க்ஸிசத்தை முதலாவதாக அறிமுகப்படுத்தியவர். அவருடைய ஆதரவின் கீழ் தலைவர் மாசே-துங்

மார்க்ஸிசம் கற்கத் தொடங்கினர். அந்த நூலகத்தில் மா சே-துங் கடமை ஆற்றிய அறை, அவர் படித்த இடம், பயன்படுத்திய பொருள்கள் முதலியவற்றை நேரில் நாங்கள் கண்டோம், பேராசிரியர் லீடா-சௌ 1927-ம் ஆண்டு வரை உபயோகப் படுத்திவந்த அறையையும் நேரில் பார்த்தோம். 1927-ம் ஆண்டு பேராசிரியர் லீடா-சௌவும், 19 புரட்சி இயக்க மாணவத் தலைவர்களும் கோமின்டாங் வெறியர்களால் கொல்லப்பட்டனர்.

பீக்கிங் பல்கலைக் கழகத்தில், 5,000க்கு மேற்பட்ட மாணவர்கள், குறிப்பாக, விவசாய, தொழிலாளர் குடும்பங்களிலிருந்து அநேகர் வந்து படிக்கின்றனர். பல்கலைக் கழகத் தலைவர் பேராசிரியர் மா-இன்-சு எங்களை வரவேற்றுக் கூறிய உரையில், இலவசக் கல்வி நடைமுறையில் இருப்பதாகவும், தேவையான மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமும் கொடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார். விடுதலை பெற்று 3 ஆண்டுகள் தான் ஆகிறது என்ற காரணத்தினாலும், விவசாயிகள், தொழிலாளர்கள் குடும்பங்களில் பிறந்த பிள்ளைகள் பல்கலைக் கழகத்திற்கு நுழையத் தகுந்த கல்வியறிவு இல்லாததாலும், அவர்களுக்கென்று குறுகிய காலத்தில் போதிய கருத்தமைந்த ஒரு கல்வித் திட்டத்தை உயர்நிலைக் கல்வித் தகுதிக்கு அமைத்திருந்தனர். ஆட்சியாளர்கள் அறிவியல், நீர்ப்பாசனம் ஆகிய முன்னேற்ற திட்டங்களைப் பூர்த்தி செய்வதன் மூலமாக மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தத் திட்டமிட்டிருப்பதால், அத்திட்டத்திற்கு ஒத்த முறையில் தான் சீனக் கல்வித்திட்டம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. மிகவும் வளர்ச்சி பெற்ற அறிவியல் கலைகள் அத்தனையும் விடுதலைக்கு முன்பு ஆங்கிலத்தில் போதிக்கப்பட்டு வந்திருந்த போதிலும், அனைத்திற்கும் தற்போது சீன மொழி, பாடமொழியாகப் பயன்படுத்தப்படுகிறது. குறுகிய

3 ஆண்டுக் காலத்திற்குள் எத்தனையோ ஆங்கிலக் கல்வி நூல்கள் சீனத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆட்சி முறையில் தாய்மொழியை ஏற்க பல ஆண்டுகள் வேண்டும் என்று கருதும் இலங்கை ஆட்சியாளருக்கும், சீன அரசாங்கத்துக்கும் எத்துணை வேற்றுமை? பல ஆண்டுக் காலமாக முயற்சி எடுக்கப்பட்டு வந்துள்ள சிங்கள அகராதி இன்னும் உருப்பட்ட பாடில்லையே! பீக்கிங் பல்கலைக் கழகத்தில் பல்வேறு நாட்டு மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. இலங்கை போன்ற ஒரு சில நாடுகளின் மொழிகளைத் தவிர, ஆசிய நாடுகளின் அரசாங்க மொழிகள் அத்தனையும் அங்கு கற்பிக்கப்படுகின்றன. இலங்கை தன் தேசிய மொழிப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளுமேயானல், பல்கலைக் கழகமொழிப் பட்டியலில் இலங்கை மொழியும் இடம் பெறும்.

டீன்ஸ்டின், ஷாங்காய், காங்சோ விஜயம்

அக்டோபர் 20-ம் நாள் இரயில் மூலமாக டீன்ஸ்டினை அன்று மாலை வந்தடைந்தோம். மூன்று பட்டினங்களை 10 நாட்களுக்குள் பார்வையிட்டு விட்டு மாஸ்கோவிற்கு நாங்கள் செல்லவேண்டி இருந்ததனால், எங்களுக்கு என்று ஒரு தனி வண்டியைக் கொடுத்திருந்தார்கள். இவ்வண்டி, நாங்கள் நிற்குமிடங்களில் நிறுத்திக் கொள்ளத் தகுந்த வசதியுடனும், திரும்பப் புறப்படும் பொழுது இரயிலுடன் இணைக்கத்தகுந்த முறையிலும் அமைந்திருந்தது. நெசவுத் தொழிலாளருக்கும், அவர்கள் குடும்பங்களுக்கும் என்று ஒதுக்கப்பட்டிருந்த மருத்துவ விடுதி ஒன்றை நாங்கள் டீன்ஸ்டினில் கண்டோம், அதற்குப் பொறுப்பாக இருந்த மருத்துவ அதிகாரி, ஏனைய வைத்தியர்களுக்கும் எங்களை அறிமுகப் படுத்தி வைத்தார். பகுதி பகுதியாக அவ்விடுதியைப் பார்வையிட்ட நாங்கள் மூன்று மணி நேரங்களுக்கு மேலாக அங்கே தங்கியிருந்து பல நோயாளிகளுடன் பேசினோம். அம்மருத்துவ விடுதி, தற்கால விஞ்ஞான சாதனங்களையும், திறமையான ஊழியர்களையும் கொண்டு விளங்கியது. 100,000 நெசவுத் தொழிலாளர்களுக்கும் அவர் தம் குடும்பங்களுக்கும் என்றே இந்த மருத்துவ விடுதி நிறுவப்பட்டது. இலவச மருத்துவ சலுகைகள் கிடைக்கும் இந்த இடத்திலும், நோயாளர் இடமின்றித் தவிக்கும் நிலை காணப்படவில்லை. நோயாளர் விரைவில் சுகம் பெறத் தகுந்த சகல விதமான வசதிகளும் அங்கு இருந்தன. வைத்திய நிபுணர்களினதும், ஊழியர்களினதும் சம்பள விகிதாசாரத்தைப் பற்றி விவாதித்தோம்.

தூதுக்குழுவினர் ஷாங்கையிலுள்ள பாலர் பள்ளிக்குவந்தபோது எடுத்த படம். வலக்கோடியில் இருப்பவர் 'யோ-டாய்-கெங்' என்பவராவர்.



ஷாங்கையிலுள்ள ஆரோக்கிய விடுதியில், ஆதர்ஸனத் தொழிலாளி யொருவரோடு, தூதுக்குழுவினர் பேசிக் கொண்டிருக்கும் காட்சி.

மருத்துவ ஊழியர்கள் பெறும் சம்பளத்தின் இரட்டிப்பான தொகையைத்தான் டாக்டர்கள் பெறுகின்றனர்.

தொழிற்சாலைகள்

அடுத்த நாள் நாங்கள் ஒரு சணல் தொழிற்சாலையைப் பார்வையிட்டோம். அங்கு 1,600 தொழிலாளர்கள் முறையே மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு ஒன்றுக்குப் பின் ஒன்ருகக் கடமையாற்றி வந்தனர். விடுதலைக்குப் பின் உற்பத்தி 4 மடங்கு அதிகரித்துள்ளதாய் அதன் மேலதிகாரி கூறினுர். அங்கு தொழிலாளர்களுக்கென ஏற்படுத்தப்பட்டிருந்த சிற்றுண்டிச் சாலைகள், விளையாட்டு நிலையங்கள், குழந்தை பராமரிப்பு நிலையங்கள் முதலியவற்றைப் பார்த்து நாங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டோம். முன்னுளில் ஜப்பானியர்களால் நடத்தப்பட்டுவந்த ஓர் காகிதத் தொழிற்சாலையையும் பார்த்தோம். விடுதலைக்குப்பின் உற்பத்தி அதிகரித்திருந்தது. விடுதலைகு முன் ஓர் தொழிலாளிக்கு 15 கில்லோகிரும் மாவு மாதச் சம்பளமாக இருந்தது, இப்பொழுது 77 கில்லோகிருமாக உயர்ந்து விட்டது. அத்தொழிற்சாலையயடுத்து வயதான தொழிலாளர்களுக்கு ஓய்வு நேரப் பள்ளிகளும், சிறுவர்களுக்குக் கீழ்ப் பிரிவுப்பள்ளிகளும், சுகாதார நிலையங்களும், பாலர் மடுவங்களும், தொழிலாளர் வாழ்வதற்கு வசதியான வீடுகளும் அமைந்திருந்தன. வாடகை மிகக் குறைவு. ஒரு அறைக்கு ரூபாய் 2 வசூலிக்கப்பட்டது. மணம் முடியாத தொழிலாளர்கள் வாடகை ஒன்றும் செலுத்தவில்லை. தொழிற்சாலை அதிபரின் சம்பளம், தொழிலாளியின் சம்பளத்தைவிட இரண்டு பங்குதான் அதிகம். தொழிலாளர்கள் தொழிற்சாலை விடுதிகளில்தான் தங்கி இருந்தார்கள். நூல் நெசவு செய்யும் தொழிற்சாலை ஒன்றில் 7,000 தொழிலாளர்கள் வேலை செய்தனர்.

அதே இடத்தில் விடுதலைக்கு முன்பு 4,000 பேர்தான் வேலை செய்தனர். உற்பத்தி 100 சத வீதம் அதிகரித்து இருந்தது. அந்தத் தொழிற் சாலையிலுள்ள தொழிலாளர் குடும்பங்களுக்கென்றே 100 வீடுகளும் கட்டப்பட்டு இருந்தன. ஓய்வு நேரத்தில் இளைப்பாறுவதற்கென ஒரு தனி விடுதி அமைக்கப்பட்டிருந்தது; வாரமொரு முறை திரைப் படங்கள் பார்க்கவும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. 70% க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பெண்களாக இருந்த காரணத்தினால், அவர்களுக்கெனப் பிரசவ விடுதிகளும், பாதுகாப்பு இல்லங்களும் பெரிய அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அத்தொழிற் சாலையில், 138 ஆதர்ஸனத் தொழிலாளர்களும், சீன முழுமையிலும் சிறந்த தொழிலாளராகப் பொறுக்கி எடுக்கப்பட்ட ஒருவரும் கடமையாற்றி வந்தனர். புதிய நிர்வாக அமைப்பு வந்ததன் பின்பு பல வசதிகளோடு, குளிர்ச்சி தரும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. ஓய்வு நேர வகுப்புக்களில் தொழிலாள மாணவர்கள் தொகை 4,000. இத்தகைய கல்வி திட்டத்தின் நோக்கம், 1952-ம் ஆண்டு இறுதியில் தொழிலாளர் மத்தியில் இருந்து கல்வி அறிவின்மையை ஒழித்துக் கட்டுவதேயாகும். தொழிலாளர் குழந்தைகளுக்கான ஆரம்பப் பள்ளியைப் பார்வையிட்டோம். கல்வி இலவசம்.

ஷாங்காயில்

அக்டோபர் 21-ம் நாள் புறப்பட்டு இரண்டு நாட்களில் ஷாங்காய்க்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கு 'கிங் கொங்' உணவு விடுதியில் தங்கியிருந்தோம். அன்று மாலை திருமதி சன்யாட்சன் அம்மையார் அவர்களால் நடத்தப்பட்டுவரும் சீனப் பொதுநலச் சங்கத்தின் ஆதரவின்கீழ் உள்ள ஒரு பாலர் பள்ளியைப் பார்வையிட்டோம். அங்கு 2-லிருந்து 7 வயது வரைக்குள்ள பிள்ளை

கள் வாழ்ந்து கற்று வந்தனர். அந்தக் குழந்தைகளுக்கு தாய்நாட்டுப்பற்று, விஞ்ஞான ஆர்வம், மக்களிடம் மதிப்பு, தொழிலுக்கு வந்தனம், பொதுச்சொத்துப் பேணல் ஆகிய உயரிய பண்புகள் போதிக்கப்பட்டு வந்தன. இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை குழந்தை கள் வீடு சென்று வருகின்றனர். மாதம் ஒரு முறை பெற் ரேர்கள் கூடி குழந்தைகளின் பிரச்சினைகள் பற்றி விவாதித்து வந்தனர். ஷாங்காய் பட்டினத்தில் மாத்திரம் இது போன்ற பள்ளிகள் 5,000 இருந்தன.

அன்று மாலை, பீக்கிங் சமாதான மாநாட்டின வெற்றியைக் கொண்டாட இருபதினுயிரம் மக்கள் திரண் டிருந்த ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது. கூட்டத் துக்குப் போகும் வழி நெடுக மனித வெள்ளம், 'சமாதானம் நீடூழி வாழ்க' என்று கோஷித்தது. வெவ்வேறு குழுக் கள் சார்பில் 20 பிரதிநிதிகள் கூட்டத்தில் பேசினர். பேசிய அத்தனை பேரையும் ஆர்ப்பாட்டத்தின் மத்தியில் வரவேற்ற தன்மை சீனமக்கள் சமாதானத்தில் கொண் டிருந்த அசைக்க முடியாத பேரார்வத்தை எடுத்துக் காட்டியது. கூட்டத்தில் இளைஞர்களோடு வயோதிகர் களும் கூடியிருந்தனர்.

24-ம் நாள் காலை ஷாங்காயிலுள்ள தொழிலாளர் கலாமன்றத்தைப் பார்வையிடச் சென்றிருந்தோம். அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் எண்ணிக்கை 100. விடுதலைக்கு முன்பு அந்த மண்டபம் பெருமுதலாளி களுடைய உணவு விடுதியாக இருந்தது. 1950-ம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் அன்று அது தொழிலாளர்களின் கலாமன்றமாக மாற்றப்பட்டது. அன்று தொட்டு நாள் தோறும் 10,000 தொழிலாளர்கள் வந்து போகின்றனர். அந்த நிலையத்தில் கல்வி, பிரச்சாரம், சொற்பொழிவுகள், தொழிலாளர் சாதனைகள், கலாச்சாரப் பகுதி, விளை

யாட்டு, நூலகம், நாட்டினுடைய சாதனைகள் பல; கலைக் கண்காட்சிகள் முதலிய பல பகுதிகள் உள்ளன. நாங்கள் இந்தப் பகுதிகள் அனைத்தையும் பார்வையிட்டதன் பின், சீனப் பொதுமக்கள் தங்கள் காலில் தாங்கள் நிற்கத் தலைப்பட்டுவிட்டனர்; உலகம் அதை உணரும் நாள் வெகுதூரத்திலில்லை என்பதை அறிந்தோம். நவசீனம் மூன்று ஆண்டு காலத்திற்குள் மிகத்துரிதமாக வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் பிரமாண்டமாக முன்னேறி இருப்பது குறிப்பிடத்தக்கதாக இருந்தபோதிலும், சீனமக்கள் சகல துறைகளிலும் முழுவளர்ச்சி பெற்றுவிட்டார்கள் என்று தீர்மானித்து விடுவது தவறு. என்றாலும், 50 கோடி மக்களைக் கொண்ட ஒரு புராதனமான இனம் விமோசனமடைந்து, மகத்தான ஆக்கத் திறமையும், ஆற்றலும், வீராவேசம் நிறைந்த உணர்ச்சியும் கொண்டு மனித குலத்தின் வாழ்க்கை முறையை மாற்றி அமைக்கும் பொன்னை பாதையில் முழுமூச்சோடு ஈடுபட்டுள்ளது என்பதை உணர்ந்தாக வேண்டும்.

ஒரு காலத்தில் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து சீனத்துக்குச் சகலவிதமான சாமான்களும், இயந்திரங்களும், மின்சாரக் கருவிகளும் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. அமெரிக்கர்களுடைய பொருளாதார முற்றுகையின் நன்மையால், இன்று சீனத் தொழிலாளர்கள் இந்தப் பொருள்கள் அனைத்தையும் தங்கள் நாட்டில் செய்து கொள்ளுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அரும்பெரும் சாதனைக்கு அமெரிக்கர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். தாங்கள் இறக்குமதி செய்ததைவிட, அதிகமான பொருள்களை மாத்திரமல்லாமல் சிறந்த பொருள்களையும் அவர்கள் இப்போது உற்பத்தி செய்வதைப் பற்றியும், தொழிலாளர்களுடைய வேலைப் பளுவைக் குறைக்கத்தகுந்த இயந்திர சாதனைகளைப் பற்றியும்,

அவர்கள் மிகவும் பெருமையுடன் எடுத்துக் கூறினர். இந்த மகத்தான சாதனைகள், சீனத்தொழிலாளிகள் தங்கள் உடலையும், ஆவியையும் தொழிலுக்கு அர்ப்பணித்து அதிசயிக்கத்தக்க ஆர்வம் கொண்டிருந்ததின் நேரான விளைவாகும். எந்த ஒரு நாட்டின் ஆட்சி முறையில் தனக்கும் ஒரு பங்கு உண்டு என்று எவனொருவன் உணர்கிறானோ, அந்த நாடும் அதன் உற்பத்திப் பெருக்கமும் கட்டாயமாக முன்னேறும். இந்தக் கலாமன்றத்தைத் தவிர, 832 தொழிலாளர் கழகங்கள் ஷாங்காய் பட்டினத்தில் மட்டும் இருக்கின்றன.

அன்று மாலை ஷாங்காயிலுள்ள 50 தொழிற்சாலைகளில் ஒன்றைப் பார்வையிட்டோம். 1,200 தொழிலாளர்களில் 75% பெண்களாக இருந்தனர். மீதி உள்ள தொழிற்சாலைகளைப் போலவே இந்தத் தொழிற்சாலையிலும் தொழிலாளர்களுக்கு வாழ்க்கை வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டிருந்தன. அந்தத் தொழிற்சாலையில் உயரிய சம்பளம் 1,000,000 யென்னும், குறைந்தது 4,000 யென்னுமாக இருந்தது. சராசரி 6,000,000 யென்னாக இருந்தது.

வீட்டு வசதித் திட்டம்

அக்டோபர் 25-ம் நாள், ஷாங்காயின் சுற்றுப்புறத்திலுள்ள சோ யாங் வில்லா என்ற இடத்தில் ஒரு பெரிய வீடு கட்டும் திட்டத்தைக் கண்டோம். 167 தனித்தனி குடியிருப்புக் கட்டிடங்கள் ஏற்கனவே பூர்த்தியாகியிருந்தன. இன்னும் அனேக வீடுகள் இதை அடுத்துக் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன. பூர்த்தியடைந்த 167 தனித்தனி கட்டிடங்கள் ஒவ்வொன்றிலும் 6 குடும்பங்கள் வசிக்கத்தகுந்த வசதி இருந்தது. 1,008 தொழிலளா குடும்பங்கள் இப்புதிய கட்டிடங்களில் வாழ்ந்தனர். பாலை

வனமாகக் கிடந்த இப்பகுதியில், ஒரு சிறு நகரம் தன் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்துகொண்டு, ஒரு சோலைவனமாகக் காட்சி தந்தது. அந்நகரில் மத்திய கூட்டுறவுப் பண்டகசாலை, உணவுச்சந்தை, 1,000 மாணவர்களுக்கு மேலுள்ள ஓர் உயர்நிலைப்பள்ளி, 500 பிள்ளைகள் கொண்ட ஒரு பாலர் பள்ளி, ஒரு பொதுகுளிக்குமிடம், ஒரு தொழிலாளர் கலாமன்றம், ஒரு திரைப்பட நிலையம், பலபொழுது போக்குக் கழகங்கள், நூலகங்கள், சகல வசதிகளுமுள்ள ஓர் மருத்துவ விடுதி முதலியன இருந்தன. 153,400 சதுர மீட்டர் நிலப்பரப்பில் இந்தச் சிறுநகரம் வளர்ந்து வருகிறது. ஒரு சில மாதங்களுக்குள் வெற்று நிலம், சதுப்பு நிலம் என்று ஒதுக்கப்பட்டிருந்ததெல்லாம் பூங்காவனம் போலப் பொலிவுறும் புதிய நகரங்கள், சீனத்தின் நாலாதிக்குகளிலும், அதிசயிக்கத்தக்க வேகத்திலே தோன்றி வருகின்றன.

அத்தகைய வீடுகள் விரைவில் கட்டப்படுவதோடு மாத்திரமில்லாமல், சுகாதார முறையில் அழகாகவும் அமைக்கப்படுகின்றன. இவ்வீட்டு வசதித்திட்டமானது, ஒவ்வொரு அறைக்கும் குறைந்த பட்சம் 6 மணி நேரம் சூரியவெளிச்சம் கிடைக்கத் தகுந்த முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது, அவரவர் தேவைகளுக்குத் தகுந்தபடி வீடுகள் கொடுக்கப்படுகிறதே அல்லாமல், உத்தியோகப் பதவிக்குத் தகுந்தபடி அல்ல. தொழிலாளர் தங்கள் சம்பளத்தில் 5% அல்லது 7% வீதத்தைத் தான் வாடகைக்காகச் செலவிடுகின்றனர். விடுதியை நடத்தும் பொறுப்பு தொழிலாளருடையதே. நாங்கள் பார்த்த பல விடுதிகள் ஒன்றில் 4 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிருந்தது. அது—கணவன், மனைவி, குழந்தை, மாமியார் கொண்டது. கணவன் ஒரு ரொட்டிக் கிடங்கில் வேலை பார்த்து மாதத்திற்கு 500,000 யென் பெறுவதாயும், மனைவி வேலை செய்

வதில்லை என்பதையும் அறிந்தோம். அங்கு இரு அறைகளும், ஒரு சமையலறையும் குளிக்குமறையுமிருந்தன. சில கட்டிடங்களில் ஒரே சமையல் அறையை இரண்டு குடும்பங்கள் உபயோகப்படுத்தி வந்தன. அறைகள் யாவும் வெகு அழகாகவும், வெளிச்சம் முதலிய வசதிகளுடனும் விளங்கின.

கூட்டுறவுப் பண்டக சாலையிலும், உணவுக் கடைகளிலுள்ள உணவுப் பொருள்களின் வகைகளையும், அவை வைக்கப்பட்டிருந்த சுகாதார முறைகளையும் பார்த்து வியப்படைந்தோம். ஒரு ஈ கூட எங்கும் தென்படவில்லை.

இவ்விடுதியிலிருந்து தொழிலாளர் சுகாதார விடுதி ஒன்றைப்பார்வையிடச் சென்றோம். சீனமக்கள் அரசியல் மாநாட்டில் கலந்துகொண்ட ஒரு ஆதர்ஸனத் தொழிலாளி இவ்விடுதியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். புதிய சீனத்தின் சிற்பிகளில் ஒப்புயர்வற்று விளங்கும் இந்தத் தொழிலாளியை நேரில் சந்தித்து அளவளாவும் வாய்ப்பைப் பெற்றது எங்களுக்குப் பெருமிதமளித்தது. புதிய சீனத்தின் கர்த்தாவாகிய தொழிலாளியை—ஏன் புதிய வாழ்வை—பொன் யுகத்தைக் கண் குளிரக் காண்பதில் தான் எத்துணை ஆனந்தம்! பீக்கிங் சமாதான மாநாடு ஆரம்பித்த அதே நாளில் தான் இந்தச் சுகாதார விடுதியும் திறந்து வைக்கப்பட்டது. ஷாங்காய் தொழிற் சங்கத்தாரால் நடத்தப்படும் இந்த சுகாதார விடுதியில் 183 படுக்கைகளும், ஒரு டாக்டரும், 13 மருத்துவ தாதிகளும் உண்டு. ஆதர்ஸனத் தொழிலாளருக்கும், தொழில் திறம் படைத்தோருக்கும் முதலிடம் கிடைத்தது. தங்கி இருந்தோருக்கு மிகச்சிறந்த உணவு கிடைத்தது. பால், பழம், முட்டை, இறைச்சி, முதலியன கொடுக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு 'டிராம்' வண்டியில் போய்வருமளவு பணம்தான் தொழிலாளர் அங்கு பெயருக்காகக் கொடுத்

தனர். சுகாதார விடுதியில் ஓய்வு பெறும்போது, தொழிலாளர்களுக்கு முழு சம்பளத்தோடு விடுமுறை கிடைக்கிறது.

அன்று மாலை அரசாங்கம் நடத்திவரும் ஒரு நெசவுத் தொழிற்சாலையைப் பார்வையிடப் போயிருந்தோம். சீனத்தில் தனி நபர்கள் நடத்தும் தொழிற்சாலைகளும், அரசாங்கம் நடத்தும் தொழிற்சாலைகளும் உண்டு. தொழிலாளரைப் பொறுத்தமட்டில் எந்தத் தொழிற்சாலையில் வேலை செய்தாலும், சகலவித வசதிகளும் கிடைத்தன.

இந்தத் தொழிற்சாலையிலும், 4,000க்கு 70 வீதம் பெண்களாகவே இருந்தனர். புதிய ஆட்சியின் பின் இங்கும் 100% வீதம் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. சம்பளம் கூடிய தொகை 1,110,000 யென்களும், குறைந்த தொகை 400,000; சராசரி 700,000 யென்களுமாகும். 22 டாக்டர்கள் தொழிலாளர் சுகம் பேண பணியாற்றுகின்றனர். 1921—1945 வரை ஜப்பானியரும், 1945—'49 வரை கோமிங்டாங் ஆட்சியினரும் நடத்திய இந்தத் தொழிற்சாலை இன்று மக்கள் கைக்கு மாறியுள்ளது.

நாங்கள் அக்டோபர் 26-ம் நாள் புறப்பட்டு கான்ஷோ என்ற அழகிய பட்டினத்தை வந்தடைந்தோம். இது, தடாகங்களும், இயற்கை வனப்புக்களும் கூடிய எழில் மிக்கப் பட்டினம். சீனத்திலுள்ள அழகிய இடங்களுக்கு இது சிகரம் போன்றது. இங்கு நாம் பார்த்தவற்றுள் முதலாவது, இரயில் தொழிலாளர் சுகாதார விடுதியே. விடுதலைக்கு முன்பு இந்தக் கட்டிடம் ஒரு நிலப்பிரபுத்துவ மேலதிகாரியின் வீடாக இருந்தது. இரயில்வேயின் ஆதர்ஸனத் தொழிலாளர் இங்கு இரண்டு வாரத்துக்கு வந்து ஓய்வெடுப்பது வழக்கம். இப்படி வருவோர்கள் சுகம் பெறுவதோடு மாத்திரமல்லாமல், தங்கள் அறிவை

வளர்ப்பதற்காகப் படித்தும், விவாதித்தும் பலன் பெறுகின்றனர். இவர்கள் மீண்டும் வேலைக்குப் போகும்போது, இந்த அரிய அறிவு பெரிதும் பயன்தரும்.

பௌத்தாலயம்

அக்டோபர் 27-ம் நாள் காலை காங்ஷோவிலுள்ள பெரிய பௌத்தாலயத்துக்குப் போனோம். எங்கள் தூதுக் குழுவைச் சேர்ந்த புத்த பிக்கு சுவாமி நாரவில்லா, புத்தமத பிக்குகளைப்பற்றித் தேவாலய குருமாருடன் பேசினார். கோமிங் டாங் ஆட்சியின்கீழ்த் தாம் பட்ட தொல்லைகளைச் சொல்லி, புதிய சீன அரசாங்கம் கோவிலைத்திருத்தக் கொடுத்துதவிய பண உதவியைப் பற்றியும் குருமார்கள் பாராட்டிக் கூறினர். பூரண மத சுதந்திரம் நவசீனத்தில் நிலைபெற்றுவிட்டது என்றும், மதத்தின் பேரில் மக்களைச் சுரண்டும் சுதந்திரம் ஒருவருக்கும் கிடையாது என்றும் கூறினர். பீக்கிங்கிலும், சில புத்த கோவில்களை நாங்கள் பார்த்தோம் என்று கேட்டு புத்த தலைமைக்குரு அகமகிழ்ந்தார்.

அன்று மாலை காங்ஷோவிலிருந்து இலங்கைக்கு ஸ்வாமி நாரவில்லாவும், கெக்கடுவகேயும் புறப்படும்போது சீனமக்களும், சாரணர் இயக்கத்தினரும் ஆயிரக் கணக்கில் கூடி இலங்கைத் தூதுக் குழுத்தலைவரை வழி அனுப்பினர். பாக்களும் வாழ்த்துக்களும் வண்டி புறப்படும் வரையில் தொடர்ந்தன.

எஞ்சிய உறுப்பினர்கள் அக்டோபர் 28-ம் நாள் புறப்பட்டு 30-ம் தேதி காலை பீக்கிங் வந்தடைந்தோம். அக்டோபர் 21-ம் நாள் பீக்கிங் கண்காட்சிச் சாலையில், கனத்த இயந்திரங்களையும், விவ்சாயப் பொருட்களையும், கம்பளி, அச்சுத் தொழில், திரைப்பட இயந்திரங்கள், கைத்தொழில் பொருட்கள் முதலியனவும் வைக்கப்பட்

டிருந்ததைக் கண்டோம். இவை யாவும் பீக்கிங் சாதனை கள். இந்தக் கண்காட்சி, சீனமக்கள் தங்களுக்கு வேண் டியதைத் தாங்களே உற்பத்தி செய்யும் செயல் திறத் தைப் பட்டவர்த்தனமாக நிரூபிக்கிறது.

சின்குவா பல்கலைக் கழகம்

அன்று நவம்பர் முதல் நாள். 1928-ம் ஆண்டு வரை அமெரிக்கர்களால் நடத்தப்பட்டு, அமெரிக்க ஆசிரியர்கள் ஆதிக்கம் நிறைந்ததுமாயிருந்த 42-ம் ஆண்டு விழா முடிவடைந்த சின்குவா பல்கலைக் கழகத்தைப் போய்ப் பார்த்தோம். 1928 ஆண்டு தொடக்கத்தில் தேசீய பல்கலைக்கழக மாக்கப்பட்டு, அமெரிக்கச் செல்வாக்குக் குறைக்கப்பட்டது. அது ஒரு பொறி இயல் கழகம் (டெக்னிக்கல்) என்றும், இப்போதுள்ள கல்வி முறை அமெரிக்க முறையினின்று மாறுபட்டதென்றும், இந்தக் கல்வித் திட்டத்தின் கீழ் மாணவருக்கு ஆராய்ச்சி உரிமை வழங்கப்பட்டிருக்கிறது என்றும், பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் கூறினர். புதிதாகக் கண்டு பிடிக்கும் முறைகளையும் அதன் முன்னேற்றங்களைப்பற்றிய வளர்ச்சிகள் பற்றியும் இந்த பல்கலைக் கழகம் சீன நாட்டிலுள்ள ஏனைய தொழிற் சாலைகளுக்கு அறிவித்து, அவர்கள் அனுபவங்களையும் யோசித்து வருகிறது. மாணவர்களிடமிருந்து பணம் வசூலிக்கப்படவில்லை. ஆனல் மாதா மாதம் உபகாரச் சம்பளம் மாணவர் களுக்குக் கிடைக்கிறது. அரசாங்கத்திலிருந்தும், சீன நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் இதில் சேர்ந்து படிக்கின்றனர். அதில் 18% வீதம் பெண்களும், 22% வீதம் தொழிலாளர் குடும்பத்தினருமாவர். தற்போது அந்தக் கழகத்தில் 5,800 மாணவர்களும், 500 ஆசிரியர்களும் உள்ளனர். அந்தப் பல்கலைக் கழகத்தைப் பெரிதாக்க கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்

பட்டுள்ளன. அதன் புதிய கட்டட நிர்மாணிப்பில் ஆசிரியர்கள், மாணவர்கள் தலைமையில் 6,000 தொழிலாளிகள் கலந்து கொண்டார்கள். 4 ஆண்டுப் பயிற்சியின் பின்பு மாணவர்கள் தொழில் வல்லுநர்களாகத் (என்ஜினியர்) தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகின்றனர். தொழிலாள வர்க்க மாணவர்களைப் பல்கலைக் கழகங்களில் சேர்ப்பதற்கெனக் குறுகிய காலத்தில் பயிற்சி தரப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட 500 மாணவர்கள் சென்ற கோடைக் காலத்தில் சேர்க்கப்பட்டனர் என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் சொன்னார். படித்து முடிந்து விட்டதும், வேலை தேடும் படலத்தில் அல்லல் படும் தொல்லை மாணவர்களுக்கு அறவே கிடையாது என்று மேலும் கூறினர்.

நவசீனத்தைப் பற்றி எங்கள் அபிப்ராயங்களை பீக்கிங் ரேடியோவில் பேசும்படி கேட்டனர். நவம்பர் 2-ம் நாள் நான் ஆற்றிய சொற்பொழிவுகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

சீனத்திற்குப் பிரியா விடை

நவம்பர் 2-ம் நாள் இரவு நவசீனத்தில் சில மணி நேரம் மட்டும் தான் நாங்கள் தங்க நேரம் இருந்தது. இதற்கிடையில், எங்களுக்கு ஒரு பிரிவுபசார விருந்து நடைபெற்றது. அடுத்த நாட்காலை நாங்கள் விமான மூலம் மாஸ்கோவிற்குப் புறப்பட வேண்டியிருந்தது. எங்களுடன் தொடர்பு கொண்டிருந்த சீன நண்பர்கள் அங்கு வந்திருந்தனர். எங்கள் தூதுக் குழுவைச் சேர்ந்த பிலிப், பண்டார நாயக்கா, சண்முகதாசன், இரத்தின வீராவும், நானும் என் மனைவியும், சீனத்து மக்களை வாயார மனமாரப் புகழ்ந்து பாராட்டினோம். சோஷியலிச புது உலகத்தை நோக்கிப் பொன்னான புது வாழ்வின் பாதையிலே அரிய பெரிய சாதனைகளுடன் கம்பீர நடை போட்டு முன்

னேறும் ஆசிய ஜோதியை அங்கம் சிலிர்க்க வாழ்த்தினேம், வணங்கினேம், போற்றினேம். ஏகாதிபத்திய ஆதிக்கத்திலே தத்தளிக்கும் அடிமை நாட்டு மக்களுக்கு நவசீன மக்களின் சாதனைகளும், உதாரணமும் ஆர்வம் மிக்க ஆதர்ஸ மலை என்றும், கீழ்த்திசையில் விடுதலை தவறி, வறுமை மிஞ்சிக் கிடக்கும் மனித குலத்தின் விமோசனத்திற்கு நவசீனம் நல்லதொரு ஆரம்பம் என்று ஆசிய மக்களின் சார்பாகக் கைகூப்பினேம். தாய்நாடு திரும்பியவுடன், நவசீனத்திலே நாம் கண்ணுரக் கண்ட உண்மைகளை எந்த சக்திகளுக்கும் அஞ்சாது, யதார்த்தமாக எங்கள் மக்களுக்கு எடுத்துக் கூறுவோம். எங்கள் நாட்டில் உண்மைச் சுதந்திரமும், சுயாதீனமும், சுபீட்சப் புது வாழ்வும் காண்பதற்கான போராட்டத்திலே இரட்டிப்புச் சக்தியோடு பணியாற்ற சபத மேற்கிறேம் என்று எமது இறுதி பிரதிக்ஞையை எடுத்தோம். நல்லுறவு ஏற்படுத்த இயக்கம் நடத்தவும், இலங்கை, சீன மக்களிடையிலுள்ள புராதான கலாச்சார, பொருளாதாரத் தொடர்பைக் கட்டி வளர்க்கவும் உறுதி கொண்டோம். அந்தப் புனித நாட்டில் தங்கி இருந்த இரண்டு மாத காலத்தில், சீனமக்கள் காட்டிய அன்பிற்கும் ஆதரவிற்கும் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்தோம்.

யோ-டாய்-கெங், பேராசிரியர் சாங்-டிங்-சுவாங் போன்றோர்கள் பேசும்போது, இலங்கை—சீன நட்புறவு நீடு நிலைத்து வாழும் என்ற நம்பிக்கையை எங்கள் தூது ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டார்கள். அவர்கள் சீனத்திலிருந்து இலங்கைக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பும் நாளை எதிர்பார்த்திருப்பதாகவும், நாங்கள் தூது வந்த நோக்கம் வெற்றி மேல் வெற்றி விளைக்கும் என வாழ்த்துக்கூறி வழி அனுப்பினர்கள்.

பீக்கிங்கிலுள்ள கோவிலொன்றில் புத்த குருமார்களோடு, சுவாமி நாரவில்ல (நடுவிலிருப்பவர்), திருமதி மகேஸ்வரி வைகுந்தவாசன் (வலக்கோடி), கெக்கடுவகே (இடதுகோடி) முதலியவர்கள் நிற்கும் காட்சி.

பொருளாதாரத் தொடர்புபற்றி இந்நூலாசிரியர் பீக்கிங் மாநாட்டில் செய்த சொற்பொழிவு

தலைவரவர்களே, சகோதரப் பிரதிநிதிகளே, நண்பர்களே!

இலங்கை சமாதானப் பிரியர்கள் சார்பில் சரித்திர முக்கியத்வம் பெற்ற இந்த மாநாட்டை வாழ்த்துகிறேன். இலங்கையைப் பொறுத்தமட்டிலுள்ள சில முக்கியப் பிரச்சினைகளை உங்களுக்கு எடுத்துக்கூற இருக்கிறேன்.

யுத்த முஸ்தீபுக்களின் விளைவாகவும், வதந்திப்போரினாலும், யுத்தத்தின் பயனாகவும் உலகநாடுகளின் சாதாரண வியாபாரத் தொடர்புகள் அற்றுப்போயின. நாடுகளுக்கிடையே வியாபாரத் தொடர்பு வளர்வது ஒருவருக்கொருவர் நன்மை பயப்பதோடு, சமாதானத்தைப் பாதுகாக்கப் பெரிதும் துணை புரிகிறது என்பது வெள்ளிடைமலை.

இன்று உலகத்தில் யுத்த பீதி அதிகரித்திருக்கிறது. அதன் பயனாக உலகமும் பிளவுபட்டுக் கிடக்கின்றது. இதன் விளைவாகப் பிளவுபட்டுள்ள நாடுகளின் பொருளாதார நிலை பெரிதும் பாதிக்கத்தகுந்த அளவிற்கு வியாபாரம் குன்றியிருப்பது மிகவும் கவலைக்கிடமானது. தன்னுடைய கொள்கைகளை ஏற்றும், தன்னைப் பின்பற்றாத நாடுகளுக்கெதிராகவும் அமெரிக்க அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள்—அமெரிக்க அரசாங்க ஆக்கிரமிப்புக் கொள்கைகளைத்தான் தெட்டத்தெளிவாக எடுத்துக்காண்பிக்கிறது. அரசியலமைப்பும் கருத்தும் மாறுபட்ட நாடுகளுடன் வியாபாரம் செய்ய மறுப்பதுடனில்லாது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளையும், அடிமை நாடுகள் சிலவற்றையும் பொருளாதார உதவியின் பெயரால் அமெரிக்க அரசாங்கம், தன் சொற்படி நடக்கும்படியும், வேறு நாடுகளுடன் வியாபாரம் செய்யாமலும் தடுத்து வைத்திருக்கின்றது. இத்தகைய ஒருமுக வியாபாரத் தொடர்பு தனி நாடுகளைப் பெரிய அளவிற்கு பாதிக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் இந்தக் கொள்கை என்ன பலாபலன்களைத் தந்திருக்கின்றது என்பதைச் சிறிது கவனிப்போம். எங்களுடைய வெளிநாட்டு வியா

பாரம் பெரிய அளவிற்குப் பிரிட்டன், அமெரிக்கா என்ற இரு நாடுகளுடன் தான் 1950-ம் ஆண்டு வரை நடந்து வந்தது. இதன் அடிப்படை நோக்கம், அடிமை நாட்டிலுள்ள விளை பொருள்களை ஆளும் நாட்டிற்கு அனுப்பி, உற்பத்திப் பொருட்களாகத் திரும்பவும் திணிக்கும் ஏகாதிபத்திய முறையை அடிப்படையாகக் கொண்டது என்னலாம். ஏகாதிபத்திய யுத்த முஸ்தீப்பு அதிகரிக்கவே எங்கள் நாட்டின் பொருளாதார முறை சீரழிந்தது.

யுத்த தளவாட உற்பத்தி அதிகரிக்கவே அடிமை நாடுகளுக்கு வேண்டிய பொருட்களைக் கொடுத்து உதவ முடியவில்லை. மேலும் அதிகமாகப் பேசப்பட்டு வரும் முன்னேற்றத் திட்டங்களுக்குத் தந்துதவிய இயந்திர சாதனங்களும் கூட, நிறுத்தப்பட்டு விட்டன. அதே சமயத்தில், நாங்கள் வெளிநாட்டிற்கு அனுப்பிவந்த விளைபொருட்களின் விலைகளும் வீழ்ச்சியடைந்தன.

எங்கள் ஏற்றுமதிப் பொருட்களுள் முதலிடம் பெற்றுள்ள ரப்பரை இதுவரையில் வாங்கிவந்த அமெரிக்கா, தனது ஏகபோக உரிமையைப் பயன்படுத்தி, ரப்பரின் விலையை வீழ்ச்சியடையச் செய்தது. ரப்பரை வாங்க மறுத்ததோடு, எங்கள் நாட்டிலிருந்து அவர்கள் வாங்கி வந்த பொருட்கள் மிகக் குறைந்துவிட்டன. 1950-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29·4 லட்சம் ரூபாய் பெறுமதியுள்ள ரப்பரை வாங்கிய அமெரிக்கா, 1951-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரை 2·5 லட்சம் ரூபாய்களுக்கே ரப்பர் வாங்கியது.

இது எங்களுடைய பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்தது. ஏற்றுமதிப் பொருட்களான ரப்பர் போன்ற பொருட்களின் விலை மிக மோசமாக வீழ்ச்சி அடைந்தது. இலங்கையின் தேசிய வருமானம் தேக்கு, தேயிலை, ரப்பர் ஆகியவற்றின் ஏற்றுமதியில் தான் தங்கியிருக்கிறது. இவற்றில் ஏதாவதொன்றின் விலை வீழ்ந்துவிட்டால் அது எவ்வளவு தூரம் இலங்கையின் பொருளாதாரத்தைப்

பாதிக்கும் என்பது சொல்லாமலே புலனுகும். சென்ற காலத்தில்கூட, ரப்பர் விலை வீழ்ச்சி அடைந்த சமயங்களில், சம்பள வெட்டு, வேலை நீக்கம், சமூக முன்னேற்றத் திட்டங்கள் நிறுத்தப்படுதல் முதலான காரியங்கள் நடைபெற்றுள்ளன. ரப்பர் விலைச்சரிவின் காரணமாக ரப்பர் தேயிலைத் தோட்ட முதலாளிகள், தொழிலாளர் சம்பளத்தில் 38% சதவீதம் குறைக்க முயற்சித்தனர். நிலைமை இன்னும் சீர் குலையுமேயாயின் தோட்டங்கள் மூடப்படுவதோடு, பெரும்பாலான மக்கள் வேலை இல்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்படுவர்.

இந்தச் சீரழிவு தடுக்க முடியாதது அல்ல. இன்று எமது ஏற்றுமதிப் பொருட்களை விற்கவும், வேறு நாடுகள் வாங்கவும் தயாராக இருக்கின்றன. 'வதந்திப்போர்' காரணமாகப் புதிய சீனு, சோவியத் யூனியன் போன்ற நாடுகளுடன் நாங்கள் வியாபாரம் செய்ய முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறேம். ஆனுல் இந்த இரு நாடுகளும் இலங்கையிலிருந்து தங்களுக்கு வேண்டியவற்றை வாங்கவும், அவர்களுக்கு வேண்டியவற்றை விற்கவும் தயாராக இருக்கின்றன. ஆனுல் அமெரிக்க அரசாங்கமோ இலங்கை, சீனு, ரஷ்யாவுடன் வியாபாரத் தொடர்பு வைத்துக்கொண்டால், உடனடியாக அமெரிக்கா, இலங்கைக்குத் தரும் பொருளாதார உதவிகளை நிறுத்தி விடுவதாக மிரட்டுகின்றது.

இலங்கை மக்களின் ஒன்றுபட்ட வற்புறுத்துதலின் பேரில் மேற்படி நாடுகளுடன் வியாபாரத் தொடர்புக்கு இருந்த தடைகளை இலங்கை அரசாங்கம் நீக்கியுள்ளது. இதனுல் இந்நாடுகளுடன் எங்கள் ரப்பர் வியாபாரம் மிகவும் அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டில் சீனுவே எமது ரப்பரை வாங்கும் முதல் நாடாக விளங்கியது. சீனு, ரப்பரை வாங்கியதின் மூலமாக, எமது நாட்டின் விலைச்சரிவைத் தடுத்து நிறுத்தி, பெரிய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க ஓரளவிற்குத் துணை புரிந்தது.

நாங்கள் சீனுவிற்கு ரப்பர் விற்றதன் பயனுக, ரப்பர் விலை எந்த அளவிற்கு மாற்றமடைந்துள்ளது என்பதை

ஒரு சிறு உதாரணத்தின் மூலம் எடுத்துக்காட்ட முடியும். இவ்வாண்டு செப்டம்பர் 18-ம் நாள் கொழும்புத் துறைமுகத்தில் போலந்தைச் சேர்ந்த கப்பல் 'சீனத்திற்கு ரப்பர் ஏற்றிக் கொண்டிருந்தது. முதல் தா ரப்பரின் விலை 1·60 சதம். சீனுவிற்கு ரப்பர் வாங்கிக் கொண்டிருந்த வியாபாரிகள் வாங்காமல் விடவே, அன்று காலையிலேயே ரப்பர் விலை ஒரு ரூபாய் 15 சதமாகக் குறைந்து விட்டது. இது கிட்டத்தட்ட ரப்பரின் உலகச் சந்தை விலையை அடுத்திருந்தது. அன்று பிற்பகல் சீனுவிற்கு ரப்பர் வாங்கும் வியாபாரிகள் திரும்பவும் வாங்கத் தலைப்பட, விலை ஒரு ரூபாய் 60 சதமாகி விட்டது. இதிலிருந்து அறியத்தக்கது என்னவெனில், எமது பொருட்களை விற்க வேறு இடம் இருப்பதோடு மாத்திரமல்லாமல், அது லாபம் தரத்தக்கதாகவும் இருக்கிறது என்பதும் தான்.

எங்கள் இறக்குமதிப் பொருட்களைப் பொறுத்தவரையில் கூட, இந்த உண்மை பொருந்தும். எங்கள் உணவுத் தேவைகளில் $\frac{2}{3}$ பங்கை இறக்குமதி செய்கிறோம். அண்மையில் எமக்கு அரிசி அனுப்பிக்கொண்டிருந்த நாடுகளின் உள்நாட்டு நிலைமை சீர்குலைந்தமையினாலும், அமெரிக்கா டாலர்களைக் கொடுத்து அரிசி வாங்கி விட்டதன் காரணமாகவும், எமது அரிசித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போயிற்று. இதன் பயனாகவும், மக்களுடைய வற்புறுத்தலின் காரணமாகவும், இலங்கை அரசாங்கம் அமெரிக்க எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அரிசி வாங்கப் பீக்கிங்கிற்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பியுள்ளது. இக்குழு ஆசியாவின் சமாதானத்தை நிலைநிறுத்தப் பெரிதும் துணை புரிந்துள்ளது. இலங்கையிடம் சீனுவிற்கு விற்க ரப்பர் உண்டு; அதே போன்று சீனுவிடம் இலங்கைக்கு விற்க அரிசி உண்டு. இந்தப் பண்டமாற்றைவிட, இருநாடுகளுக்கும் நன்மை பயக்கத்தக்க வழிகள் உண்டா?

அடிமை நாடுகளிலுள்ள மக்களைப் பாதிக்கின்ற இன்னொரு பிரச்சினை, இயந்திர ஏற்றுமதியே. சுரண்டல் மூலம் நாசஞ்செய்யப்பட்ட நாடுகள் நலம்பெற வேண்டுமாயின்,

தொழில் வளம் பெருகவேண்டும். இவற்றைச் சாதிக்க அடிமை நாடுகளுக்குத் தொழில் வளம் மிகமிக அவசியம். தொழில் வளத்தைப் பெருக்க அடிமை நாடுகளுக்கு இயந்திர உதவிதந்து உதவ ஆங்கிலோ-அமெரிக்கர் மறுத்து வருகின்றனர். இக்கொள்கை இலங்கை மக்கள் நலனுக்கு மாறுபட்டது. 'கொழும்புத் திட்டம்' என்ற பெயரால், பெரும் பெயர் கொண்ட கண்துடைப்புத் திட்டங்களை, ஏகாதிபத்திய வாதிகள் உண்டாக்கியுள்ளனர். மேலெழுந்தவாரியாக ஆராயும்போது, இத்திட்டங்களின் போலித்தன்மை புலனாகும். கொழும்புத் திட்டத்தை உதாரணத்திற்குப் பார்ப்போம். இது அமெரிக்கர்கள் பண உதவி தருவார்களென்ற நம்பிக்கை மீது கட்டப்பட்டது. நான்கு அம்ச உதவித்திட்டம் போன்ற ஏமாற்றுத்திட்டம்கூட, இதற்கு ஒருவிதப் பொருளுதவியையும் அளிக்கவில்லை.

கொழும்புத் திட்டத்தைப் பொறுத்த வரையில், பிரிட்டன், எமக்கு வரவேண்டிய பணத்தின் ஒரு பகுதியையாவது தரும் என்ற நம்பிக்கையுண்டு. இரண்டாவது உலக யுத்தத்தின்போது எம்மிடமிருந்து வாங்கிய பொருட்களுக்குப் பணத்தைக் கொடுக்காமல் முடக்கி வைத்திருந்தது. அதனைப் பிரிட்டன் பல தவணைகளில் எமக்குத் தருவதாகச் சம்மதிக்கும் கண்துடைப்புத் திட்டமே தான் கொழும்புத் திட்டம்.

இத் திட்டத்தின்கீழ் உள்ள எல்லாத் துணைத் திட்டங்களும் எம்மைப் பொருளாதார அடிமைப் பாட்டினின்றும் விடுவிக்கத் தக்கவையல்ல. திட்டத்தின் எல்லா அம்சங்களும், போக்கு வரத்து, விவசாயம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தான் உதவுகின்றனவே தவிர, தொழில் வளத்தைப் பெருக்கத் தகுந்த அம்சம் எதுவுமே கிடையாது. உலகப் பாங்கிப் பிரதிநிதிகள், இலங்கையின் தொழில் வளத்தைப் பெருக்கக் கூடாதென்றும், விரிந்த அளவில் விவசாயத்தைக் கூட்டத் திட்டமிடுவது சரியல்லவென்றும் அபிப்ராயம் தெரிவித்திருக்கின்றனர். அடிமை நாடுகளினுடைய பொருளாதாரத்தைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தும் ஏகாதிபத்தியத்

திட்டத்தின் ஒரு பகுதியே இது. இதை நாங்கள் எடுத்துக் காட்டியவுடன், இலங்கை அரசாங்கம் மூலதனத்தைத் தேடிக் கொள்வது மிகமிகக் கடினமென்று காரணம் காட்டுகிறது. யுத்த தளவாட உற்பத்தியின் மூலம் தொழில் வளத்தை நாசமாக்க விரும்பும் நாடுகளில் தான் இயந்திர சாதனத் தட்டுப்பாடு ஏற்படும். துரதிர்ஷ்டவசமாய் இயந்திர சாதனங்களைப் பெறவேண்டிய நிலையும் இந்நாடுகளின் மீது சார்ந்து கிடக்கின்றது. இரங்கூனில் நடைபெற்ற இ. சி. ஏ. எப். இ., (E. C. A. F. E.) மாநாட்டில் சோவியத் தூதர், உலகத்திற்கு வேண்டிய இயந்திர சாதனங்களைத் தரவும், பொருளாதாரத் துறையில் பின்தங்கியுள்ள நாடுகளைத் தொழில் வளமுடையதாக மாற்றவும் தயார் என்று கூறினார். ஆனால் இத்தகைய வாய்ப்புக்களை, இலங்கை அரசாங்கம் பெற முடியாதபடி அமெரிக்க அரசாங்கத்தின் பயமுறுத்தலும், வியாபாரத்தில் தலையிடுதலுமான போக்குத் தடைசெய்து விட்டன. இதனால் உலகத்தின் சரிபாதி நாட்டோடு பிணங்கிய முறையில் வாழும் நிலை ஏற்பட்டிருக்கிறது. பின்தங்கியுள்ள நாடுகளை வளர்ச்சி அடையச் செய்வதும், வியாபாரத் தொடர்பு கொள்வதும், பொருளாதார ஒத்துழைப்பும் தான் உலகத்தில் யுத்த அபாயத்தைக் குறைக்கச் செய்வதாகும் என்பதை நாங்கள் நன்கு உணருகிறோம. சமாதான இயக்கத்தின் சார்பில், அமெரிக்க அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டைத் தளர்த்தவும், எல்லா நாடுகளுடனும் வியாபாரத் தொடர்பு கொண்டு நட்புறவை வளர்க்க வற்புறுத்தவும் வேண்டியது அவசியம். மாஸ்கோவில் நடந்த உலகப் பொருளாதார மாநாட்டிற்கு இலங்கையினின்றும் ஒரு தூதுக் குழுவை அனுப்ப முடிந்தமைப்பற்றி பெருமகிழ்ச்சி தெரிவிப்பதுடன், அதன் பயனாக இலங்கைக்கும், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சோவியத் யூனியன், சீனா போன்ற நாடுகளுக்குமிடையில் வியாபாரம் அதிகரித்துள்ளது என்பதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். முடிவாக, எனக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் உள்ள சிபார்சுகளை மனதார ஆதரிக்கின்றேன்.

ஆசிரியர் பீக்கிங் வானொலியில் பேசியது.

அருமை நண்பர்களே !

நவசீனாவில் ஒரேயொரு 'ஈ'யைத்தான் கண்டேன். ஒரு பிச்சைக்காரனைக் கூட காணவில்லை. கவலை நிறைந்த முகம் ஒன்றைக் கூட காணவில்லை. ஒரு மாதத்திற்கு மேல் சீனத்தைச் சுற்றிப் பார்த்து உங்கள் நாட்டைப்பற்றி அறிந்து கொண்டேன். இரந்தாருமில்லை ; துன்புற்றாருமில்லை. ஐரோப்பாவிற்குச் சமமான நிலப்பரப்பும், 50 கோடி மக்களும் நவசீனத்திலுண்டு என்பது ஞாபகத்திலிருக்கிறது. மூன்று ஆண்டுகட்கு முன்பு இந்த நாட்டில் கவலை குடி கொண்ட முகங்கள், ஓடு தாங்கிய 'கை' கள், 'ஈ'க்கள் முதலானவற்றின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. அப்படி ஏதாவது அற்புதம் நிகழ்ந்தது என்று எண்ணுகின்றீர்களா? இல்லை. உண்மையில் சீனமக்கள் தங்கள் வாழ்வின் வளத்தைக் கண்டு பிடித்துக் கொண்டனர். மக்களனைவரும் ஒரே குரலுடன் தங்கள் அருமைத் தலைவர் மாசே-துங்கின் அழைப்பிற்குப் பதில் கூறினர்.

சீனமக்கள் சமாதானம் விரும்புபவர்கள். அவர்கள் மூச்சில் சமாதானம் ஒலிக்கின்றது. சமாதானத்தை விரும்பும் உலக மக்கள் அனைவருக்கும் நட்புக் கரத்தை நீட்டுகின்றனர். இத்தகைய உணர்ச்சியின் பிரதிபலிப்பு ஆசிய, பசிபிக் பகுதிகளின் சமாதான மாநாடாக மாறியது. பீக்கிங்கை விடச் சிறந்த மற்றோர் இடம் இம்மாநாட்டை நடத்தக் கிடைத்தே இருக்காது. உலக நாடுகளினது சமாதான இயக்கங்கள் வெகு துரிதமாக முன்னேறுவதற்குக் காரணம் நவசீனத்தின் சாதனைகளும், அவற்றைப் பேண சீனமக்கள் கொண்டுள்ள சமாதான ஆர்வமுமே தவிர, இம் மாநாடல்ல என்பது என் கருத்து.

சீன சமாதானக் குழுவின் ஆழ்ந்த அறிவும், அத் தலைவர்களினுடைய சாதனைத் திறமையும் தான் இம்

மாநாட்டை வெற்றி பெறச் செய்தன. 37 நாடுகளிலிருந்து வந்த பல்வேறு கருத்துக்களையுடைய 400 பிரதிநிதிகள், ஏகோபித்து எத்தனையோ தீர்மானங்களை ஏற்றுக்கொண்டனர் என்றால், அது சமாதானத்திற்கும் சீன மக்களுக்கும் உள்ள பெரும் சாதனை வெற்றியைக் காட்டுகின்றது. இந்த மாநாட்டின் மகத்தான சாதனைகளை முழுதும் உணர்த்த சில காலம் செல்லலாம். இந்தியா, பாகிஸ்தான் பிரதிநிதிகள் ஒரு கூட்டு அறிக்கையைச் சமர்ப்பித்ததுடன், இருநாடுகளுக்கு மிடையேயுள்ள சகல பிரச்சினைகளையும் சமாதான முறையில் தீர்த்துக்கொள்ள முயற்சிகள் எடுப்போம் என்று வாக்குறுதியும் செய்து கொண்டனர்.

எழுத்தாளன் என்ற முறையில், தினத்தாள்கள், சஞ்சிகைகள் போன்ற பிரசுரங்களைப் பார்த்துப் பெரிதும் கவர்ச்சி அடைகிறேன். சுவர் ஒட்டிகள் மக்கள் மத்தியில் பெற்றுள்ள செல்வாக்கைக் கண்டு மக்கள் பொது விவகாரங்களில் காட்டும் அக்கரையைக் கணிக்க முடிகிறது.

உலக சமாதானத்தை உறுதிப்படுத்தும் மிக முக்கியமான காரணம், சீனத்திற்கும், புதிய ஜனநாயக நாடுகளுக்கும், சோவியத் யூனியனுக்குமிடையில் ஏற்பட்டு வளர்ந்துவரும் நல்லுறவே என்பது தெளிவாம். சோவியத் யூனியன் மக்கள் மீது சீன மக்கள் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பையும் மதிப்பையும் நவசீனத்தில் நன்கு பார்க்க முடிகிறது. ஸ்டாலின் என்ற சொல்லைக் கேட்டவுடன் சீனக்குழந்தைகள் உள்ளத்தில் ஏற்படும் உவகை கண்டு களிக்கத் தக்கது.

வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நம்பமுடியாத அளவிற்கு ஏற்பட்ட முன்னேற்றத்துக்குக் காரணம், மக்களும் அரசாங்கமும் ஒன்றுகியதே. மூன்று ஆண்டுகளில் நீங்கள் சாதித்ததை, வேறு எந்த வழியிலும் சாதிக்க முடியாது. சீனநாட்டுத் தலைவர்களின், அறிவினல் நூற்றாண்டுகள் ஒரு சில ஆண்டுகளாகச் சுருக்கப்பட்டுள்ளன.

சீனநாட்டு மக்கள் வியாபாரம், கலாச்சாரம் என்ற ரீதியில் உலக நாடுகள் அனைத்துடனும் காட்டி வருகின்ற

அவாவானது பரஸ்பரம் நன்மை பயப்பதோடு, உலக சமாதானத்துக்குப் பெரிதும் துணை புரிகின்றது.

உலக மக்கள் தொகையின் நாலில் ஒரு பங்கு உள்ள சீனநாடு, இன்னும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் இடம் பெறவில்லை. இந்த ஸ்தாபனம், அமெரிக்க அரசாங்கத்தின் கைப்பொம்மையாக இருந்து வருவதையேதான் எடுத்துக் காட்டுகிறது. இது மிகவும் அர்த்தமற்றதும், பொறுக்க முடியாததுமான சம்பவம். இதற்குக் காரணம், சிறு பார்மோசா தீவில் வாழுகின்ற ஒரு அமெரிக்க அடிவருடியை சீன மக்களின் பிரதிநிதி என்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சொல்லுவது தான். இத்தகைய அடாத செயல் ஒன்றை உலக மக்கள் எத்தனை காலம் பொறுப்பார்கள்? ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பெயரால் நடத்தப்படும் கொரிய யுத்தத்தை இவர்கள் எவ்வளவு காலம் விட்டுக் கொண்டு இருக்கப் போகிறார்கள்?

மனித குலத்திற்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்கள், கொலைகள் அத்தனைக்கும் முடிவு காலம் கிட்டிவிட்டது. ஆதிக்க வெறி கொண்டு திரியும் அமெரிக்க அரசாங்கத்தினரின் யுத்தக் கொள்கைகளை உலக மக்கள் அனைவரும் நன்கு உணாத்தலைப்பட்டு விட்டனர்.

சீனத்திலிருந்த ஈக்கள் அழிக்கப்பட்டதுபோல, அமெரிக்காவிலுள்ள கொடிய சக்திகளும், அதனுடைய கைக்கூலிகளும் அழித்து ஒழிக்கப்படுவர் என்பது திண்ணம். இதைச் செய்வதற்கு சோவியத் யூனியனும், நவசீனவும், சமாதானத்தை விரும்பும் மற்ற நாடுகளுக்கு வழிகாட்டிகளாக விளங்கும் என்பது உறுதி.

சமாதானத்தை விரும்பும் உலக மக்கள் சக்தி ஓங்குக! அவர்கள் ஒற்றுமை நீடூழி வாழ்க!

Vinodan Press, 33, Jones Street, Madras-1.

சிந்தனை

[அரிய ஆராய்ச்சி நூல்]

ஆசிரியர்
திரு அ. இளங்கோவன்

* * *

எண்ணம் உலகத்தை நடத்துகிறது; வாழ்வுக்கு
வழிகாட்டுகிறது. வாழ்வு வளம் பெற, நாடு
செழிக்கச் சிந்தனை செய்யுங்கள்.

* * *

சிந்தனை தான் நாகரிகத்தின் உயிர்.

* * *

அறிஞராக விரும்பும் ஒவ்வொருவரும் அவசியம்
படிக்கவேண்டிய நூல்.

* * *

விவரங்களுக்கு எழுதவும்:

சிந்தனைப் பதிப்பகம்

௨௭, பேந்தியன் ரோட், சென்னை-௮